தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY



Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL



சென்னை மலர்: 01 இதழ்: 236 08.04.2026 புதன்கிழமை
Chennai Volume: 01 Issue: 236 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(8-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-25
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி மாலை 5.48 வரை
பிறகு சப்தமி.
நட்சத்திரம்:
மூலம் (முழுவதும்).
யோகம்
மரணயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி..

மேஷம் .................. ஆசை
ரிஷபம் ................ அமைதி
மிதுனம் .................. பண்பு
கடகம் .................... லாபம்
சிம்மம் ................. நன்மை
கன்னி .................. உயர்வு
துலாம் ................... பணிவு
விருச்சிகம் ............ தேர்ச்சி
தனுசு ....................... நட்பு
மகரம் .................. நிம்மதி
கும்பம் ................ உயர்வு
மீனம் .................... கடமை

# வேட்புமனுக்கள் பரிசீலனை: மு.க.ஸ்டாலின், விஜய் மனுக்கள் ஏற்பு

**சென்னை, ஏப்.8:**

தமிழக சட்டசபை தேர்தலையொட்டி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கான காலஅவகாசம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், இன்று வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்று வருகிறது. தேர்தலில் போட்டியிட மொத்தம் 7,600 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். மனுக்களைத் திரும்பபெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.




இந்த நிலையில், வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்று வரும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்த வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்த உதயநிதி ஸ்டாலின் வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தலைவரும், நடிகருமான விஜய் சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை கடந்த 30-ந்தேதி வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரியில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விஜய் தாக்கல் செய்தார்.

இந்தநிலையில், இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கடந்த 4-ந்தேதி பெரம்பூர் தொகுதியில் விஜய் சார்பில் புதிதாக திருத்தப்பட்ட பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதில் திருச்சி வேட்புமனு பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள, கொளத்தூர் தொகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்ததாக தன் மீதும், சுமார் 5 ஆயிரம் பேர் மீதும் சென்னை பெரவள்ளூர் போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற வழக்கும்,

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந்தேதி மதுரையில் நடைபெற்ற மாநாட்டில் விஜய் நடைமேடையில் நடந்து வரும் போது, ஆர்வத்தில் வாலிபர் ஒருவர் நடைமேடையில் ஏறியதாகவும், அப்போது 10 பவுன்சர்கள் அவரை இடித்து தள்ளியதாகவும், அதில் நெஞ்சில் உள்காயம் ஏற்பட்டதாகவும் புகார்தாரர் அளித்த புகாரில் மதுரை கூடக்கோவில் போலீஸ் நிலையத்தில் தன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற வழக்கும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பெரம்பூர் தொகுதியில் போட்டியிட தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனு ஏற்கப்பட்டதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். வேட்புமனு பரிசீலனை தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், விஜய்யின் மனு ஏற்கப்பட்டுள்ளது. விஜய் மனு ஏற்கப்பட்டதற்கு திமுக மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேலும் திருச்சி கிழக்கில் போட்டியிட விஜய் தாக்கல் செய்த வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.

இதைபோல கொளத்தூர் தொகுதியில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் வேட்புமனுவும், சாத்தூர் தொகுதியில் போட்டியிடும் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.

* தர்மபுரியில் பாமக சார்பில் போட்டியிடும் சவுமியா அன்புமணியின் வேட்புமனு ஏற்கப்பட்டுள்ளது.

*மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடும் பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜனின் வேட்புமனு ஏற்கப்பட்டுள்ளது.

மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன், த.வெ.க. வேட்பாளர் வெங்கடரமணன் ஆகியோர் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுளள்து.

தருமபுரி சட்டசபை தொகுதியில் பா.ம.க. வேட்பாளர் சவுமியா அன்புமணியின் வேட்பு மனுவும் ஏற்கப்பட்டுள்ளது.


சாத்தூர் தொகுதியில் நயினார் நாகேந்திரன், கோவை வடக்கு தொகுதியில் வானதி சீனிவாசன் ஆகியோரின் வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டுள்ளது.

# நாட்டிலேயே அதிக ஊழல் செய்த கட்சியாக காங்கிரஸ் உள்ளது

## பிரதமர் மோடி பேச்சு

**கவுகாத்தி, ஏப்.8:**

அசாம் மாநில சட்டசபைக்கு ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும். இந்த நிலையில், அசாமில் திப்ரூகார் நகரில் நடந்த அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதமர் மோடி கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



அப்போது அவர் பேசும்போது, காங்கிரஸ் கட்சி ஊழல் கறை படிந்த கட்சி என்பது மட்டுமின்றி, வேலை செய்யவும் தயாராக இல்லை. இதன் விளைவாக, அசாமில் உள்ள ஒரு தலைமுறையினர் வேலைவாய்ப்பு எதுவும் இன்றி போராடி வருகின்றனர்.

ஆனால், பா.ஜ.க.-என்.டி.ஏ.வானது ஒற்றுமையாக இணைந்து வேலைக்கான வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. நாட்டின் சக்தி வாய்ந்த ஒன்றாக அசாம் உருமாற வேண்டும் என்று நாங்கள் ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகிறோம். திப்ரூகார் நகரம் முக்கிய மைய நகராக மாறும் என்றார். அசாமில் காங்கிரஸ் ஆட்சியில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டபோது, சுத்திகரிப்பு மற்றும் தொழில் வளர்ச்சியானது மாநிலத்திற்கு வெளியே நடந்தது. இதனால், உள்ளூர்வாசிகள் பொருளாதார பலன்களை பெற முடியாமல் மோசடிக்கு ஆளானார்கள்.

இந்த நிலைமையை பா.ஜ.க. மாற்றி கொண்டிருக்கிறது. இந்த துறைகளில் எல்லாம் அசாம் தற்போது சுயசார்புடன் உள்ளது. சொந்த இயற்கை வளங்களில் இருந்து மாநிலமும், அதன் மக்களும் நேரடி பலன்களை பெறுவது உறுதி செய்யப்பட்டு உள்ளது என்றார்.

நாட்டிலேயே அதிக ஊழல் செய்த கட்சியாக காங்கிரஸ் உள்ளது. காங்கிரசின் முதல் குடும்பம் நாட்டிலேயே அதிக ஊழல் செய்த குடும்பம் என்ற அளவில் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். நேசனல் ஹெரால்டு ஊழலில் டெல்லி, மும்பை போன்ற பெருநகரங்களில் ஆயிரக்கணக்கான கோடி மதிப்பிலான நில அபகரிப்பு குற்றச்சாட்டுகளை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். உண்மையில் அவர்களே நில ஏ.டி.எம்.களாக செயல்பட்டு வருகின்றனர் என்று எந்தவித பெயரையும் குறிப்பிடாமல் பிரதமர் மோடி குற்றச்சாட்டாக கூறினார்.

# சாத்தான்குளம் வழக்கு! உடைக்கப்பட்ட பேனா முனை!! அர்த்தம் என்ன?

**புதுடெல்லி, ஏப்.8:**

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில், காவல் ஆய்வாளர் உள்பட 9 பேருக்கு மரண தண்டனை விதித்த மதுரை மாவட்ட நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன், இருக்கையிலிருந்து எழும் முன்பாக தனது பேனா முனையை மேஜையில் குத்தி உடைத்தார்.

தமிழகத்தையே உலுக்கிய தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் (58), அவரது மகன் பென்னிஸ் (31) ஆகியோர், கடந்த 2020ஆம் ஆண்டு கரோனா பொதுமுடக்கக் காலத்தில், இரவில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதலாக கடையை திறந்து வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டி, காவலர்கள் அழைத்துச் சென்று காவல்நிலையத்தில் அடித்துத் துன்புறுத்தியதில், இவரும் படுகாயமடைந்து உயிரிழந்தனர்.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஸ்ரீதர் உள்ளிட்ட 9 பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கு மரணி தண்டனை விதிக்கப்பட்டது.

அர்த்தம் என்ன? ஒரு தீர்ப்பு எழுத்துப்பூர்வமாக எழுதப்பட்டு, கையெழுத்திடப்பட்டவுடன், நீதிபதிகளால் அதை மறுபரிசீலனை செய்யவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது. எனவே, நீதிபதி அல்லது நீதிபதிகள் தங்களது தீர்ப்பு குறித்து மாற்று சிந்தனைகள் கொள்வதைத் தடுக்கவே பேனா முனை உடைக்கப்படுகிறது.

மரண தண்டனை வழங்கிய பேனாவின் முனையை உடைப்பதன் மூலம், அந்த நினைவு அதனோடு அழிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# ஒரே இரவில் ஈரானை அழிக்க முடியும்: டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.8:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டாக இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உள்பட பலர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் மீதும், இஸ்ரேல் மீதும் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

அதேவேளை, அரபிக்கடலில் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கப்பல்கள் உலகின் பிற நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் சர்வதேச சந்தைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக பல்வேறு நாடுகள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

இதற்கிடையே போரை நிறுத்துமாறும், அமெரிக்க நட்பு நாடுகளுக்காக மூடப்பட்ட ஹார்முஸ் நீரிணையை திறந்து விடவும் ஈரானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் காலக் கெடு விதித்திருந்தார். ஆனால் அவரின் எச்சரிக்கை மற்றும் காலக்கெடுவை ஈரான் நிராகரித்தது. இது குறித்து எகிப்தில் உள்ள ஈரான் தூதரகத்தின் தலைவர்




மொஜ்தபா பெர்டோசிபூர் கூறுகையில், "நாங்கள் வெறுமனே ஒரு போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம். மீண்டும் நாங்கள் தாக்கப்பட மாட்டோம் என்ற உத்தரவாதங்களுடன் மட்டுமே போர் முடிவுக்கு வருவதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்" என்று தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் டிரம்ப் ஈரானுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்து பேசினார், அதில், ஈரானில் சிக்கிய அமெரிக்க ராணுவ வீரரை வெற்றிகரமாக மீட்கப்பட்டதை கொண்டாட நாம் இங்கு கூடியுள்ளோம். ஈரான் என்ற ஒட்டுமொத்த நாட்டை ஒரு இரவில் அழித்து விட முடியும்.. அந்த இரவு ஒருவேளை இன்றைய இரவாகக்கூட இருக்கலாம் என்று கூறினார்.முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், தனது 'ட்ரூத் சோஷியல்' தள பதிவில், செவ்வாய்க்கிழமையுடன் ஈரானுக்கான காலக்கெடு முடிகிறது என்றும், ஒருவேளை ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் ஈரானிடம் மின் நிலையங்களே இருக்காது," என்று மிரட்டல் விடுத்திருந்தார்.

# தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க தீர்மானம் ரத்து

**புதுடெல்லி, ஏப்.8:**

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்துக்கான நோட்டீஸ் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கடந்த மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.



எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்த இந்த நோட்டீஸில் மக்களவையின் 130 எம்பிக்கள், மாநிலங்களவையின் 63 எம்பிக்கள் கையெழுத்திட்டு இருந்தனர். இந்த சூழலில் மக்களவை, மாநிலங்களவையில் நோட்டீஸ் ரத்து செய்யப்பட்டு உள்ளது.

இது குறித்து மக்களவை செயலாளர் உப்தல் குமார் சிங் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்யக் கோரி கடந்த மார்ச் 12ம் தேதி நோட்டீஸ் அளிக்கப்பட்டது. இந்த நோட்டீஸை மக்களவைத் தலைவர் (ஓம் பிர்லா) ஆய்வு செய்தார்.

தீவிர பரிசீலனைக்குப் பிறகு நோட்டீஸை ஏற்க மக்களவைத் தலைவர் மறுத்துவிட்டார். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதேபோல மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணனும் நோட்டீஸை ஏற்க மறுத்துவிட்டார்.

# தீவிர சிகிச்சையில் ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி?

**லண்டன், ஏப்.8:**

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி, ஈரானின் கோம் நகரில் சுயநினைவற்ற நிலையில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என ஒரு உளவுத்துறை தகவலை மேற்கோள் காட்டி டைம்ஸ் யுகே செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

டைம்ஸ் யுகேவின் செய்தியின்படி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், வளைகுடா நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொண்ட உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில், மொஜ்தபா காமேனி சுயநினைவற்ற நிலையில் இருப்பதாகவும், அவருக்கு கோம் நகரில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச தலைவர் மொஜ்தபா காமேனியின் இருப்பிடத்தை முதன்முறையாக வெளிப்படுத்தும் அந்த உளவுக் குறிப்பை தாங்கள் அறிந்ததாகவும் டைம்ஸ் யுகே குறிப்பிட்டுள்ளது. மேலும், "ஈரான் ஆட்சியின் எந்தவொரு முடிவெடுக்கும் செயலிலும் அவரால் பங்கேற்க இயலாது" என டைம்ஸ் யுகே செய்தி வெளியிட்டது.

மேற்கு ஆசியாவில் மோதல் வெடித்ததிலிருந்து, மொஜ்தபா காமேனி எந்தவொரு பொதுவெளியிலும் தோன்றவில்லை. அவர்



கூறியதாகக் கூறப்படும் செய்திகளை மட்டுமே ஈரான் அரசு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. இதற்கிடையில், அயத்துல்லா காமேனியின் உடல் கோமில் அடக்கம் செய்யத் தயாராகி வருவதாக 'தி டைம்ஸ்' பத்திரிகையின் செய்தி குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை இரவு 8:00 மணிக்குள் ஒப்பந்தத்தை எட்டுமாறு ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "அவர்களுக்கு நாளை வரை அவகாசம் உள்ளது. இப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகு, அவர்களுக்குப் பாலங்கள் ஏதும் இருக்காது. மின் நிலையங்கள் ஏதும் இருக்காது. கற்காலம் போன்ற நிலைதான் இருக்கும்," என்று எச்சரித்தார்.


Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## சீர்காழியில் வாக்கிங் சென்று வாக்கு சேகரித்த மு.க.ஸ்டாலின்



**மயிலாடுதுறை, ஏப்.08:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நடைபயிற்சி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சீர்காழி தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனை ஆதரித்து பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

சீர்காழி மார்க்கெட்டிற்குள் சென்று வணிகர்கள், பொதுமக்களிடம் வாக்கு சேகரித்த முதலமைச்சர், உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சீர்காழியில் திட்டை சாலை உழவர் சந்தை முதல் கச்சேரி சாலை புதிய பேருந்து நிலையம் வரை முதலமைச்சர் நடந்து சென்று வாக்கு சேகரித்தார்.

சீர்காழியில் வாக்கு சேகரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடன் பொதுமக்கள் கைகுலுக்கியும் செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர்.

## அதிகார மமதையில் அப்பாவி மக்களுக்கு எதிராக நிகழும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்

### கமல்ஹாசன்




**சென்னை, ஏப்.08:**
மக்கள் நீதி மய்யத் தலைவரும், எம்.பி.யுமான கமல்ஹாசன் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சாத்தான்குளத்தில் போலீஸாரால் அடித்துக் கொல்லப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் வழக்கில் தீர்ப்பு வெளியாகியுள்ளது.

சட்டத்தை அறிந்தவர்கள், பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக் கொண்டவர்கள் சிறிதளவும் ஈவிரக்கமின்றிச் செய்த கொடுமைகளை அறிகையில் நெஞ்சம் பதைக்கிறது.

நாட்டையே அதிரச் செய்த இந்த அநீதிக்கு எதிராக, விடாமல் போராடிய ஜெயராஜ் பென்னிக்ஸ் குடும்பத்தார், சாத்தான்குளம் ஊர்ப் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், ஆதாரங்களுடன் குற்றத்தை நிரூபித்த சிபிஐ விசாரணை அதிகாரிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

## ஏப். 9ல் புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயங்காது என அறிவிப்பு!




**புதுச்சேரி , ஏப்.08:**
புதுச்சேரி தேர்தலையொட்டி வருகிற ஏப். 9 ஆம் தேதி(வியாழக்கிழமை) வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் வரும் ஏப்.9 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதையடுத்து அன்று அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அன்றைய தினம் ஜிப்மர் மருத்துவமனை இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"சட்டப்பேரவைத் தேர்தல் 2026 - வாக்குப் பதிவு நாளை முன்னிட்டு 09.04.2026 (வியாழக்கிழமை) அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்று ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. எனவே இந்த தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனினும் அவசரப் பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 70 வயதில் கள்ளக்காதல்: மனைவியின் காதலனை வெட்டிக்கொன்ற முதியவர்

**பிரயாக்ராஜ், ஏப்.08**
உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள நைனி பகுதியை சேர்ந்தவர் ராம்லால் (66). இவரது மனைவி அனார்கலி (65). இந்தநிலையில் பக்கத்து வீட்டை சேர்ந்த காவலாளியான ஹசாரி லாலுக்கும் (70) அனார்கலிக்கும் கடந்த சில ஆண்டுகளாக கள்ளத்தொடர்பு இருந்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஹசாரி லாலை ராம்லால் தன் மனைவியிடம் பேசுவதை நிறுத்துமாறு பலமுறை எச்சரித்து உள்ளார். ஆனால் இதை கண்டுகொள்ளாத ஹசாரி லால் அனார்கலியுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த ராம்லால் ஹசாரி லாலை தீர்த்துக்கட்ட முடிவு செய்தார். இதையடுத்து அதிகாலை 2 மணியளவில் யாருக்கும் தெரியாமல் ஹசாரி லாலின் வீட்டிற்குள் கோடாரியுடன் நுழைந்த ராம்லால் அவரை கடுமையாக தாக்கினார். இதில் முகம் மற்றும் தலையில் பலத்த வெட்டு காயமடைந்த ஹசாரி லால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பின்னர் வீட்டிற்குத் திரும்பி வந்த ராம்லால் கோடாரியை மறைத்து வைத்தார்.

ஹசாரி லால் கொலை செய்யப்பட்டு கிடப்பதை பார்த்த அவரது மகன் இது தொடர்பாக போலீசில் புகார் அளித்தார்.

போலீசார் சி.சி.டி.வி. காட்சிகள் மற்றும் உள்ளூர் மக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் ராம்லாலை கைது செய்தனர்.

மேலும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கோடாரியை மீட்டனர். கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்று போலீசார் ராம்லாலிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இதுவரை இல்லாத வகையில் ‘நீட்’ தேர்வுக்கு 26 லட்சம் மாணவர்கள் விண்ணப்பம்




**சென்னை, ஏப்.08:**
நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் நீட் தேர்வில் தகுதி பெறுபவர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. அதேபோல, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கும் நீட் தேர்வு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இத்தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்துகிறது.

அதன்படி, 2026-27-ம் கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் மே 3-ம் தேதி பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோவை என 30 நகரங்கள் உட்பட நாடு முழுவதும் 552 நகரங்களில் தேர்வு நடக்கிறது. துபாய், அபுதாபி, தோகா, மஸ்கட், ரியாத், சிங்கப்பூர் என வெளிநாடுகளில் 16 இடங்களில் தேர்வு நடைபெறுகிறது.

ஆன்லைனில் (https://neet.nta.nic.in) இந்த தேர்வுக்கு விண்ணப்பிப்பது கடந்த பிப்.8-ம் தேதி தொடங்கி மார்ச் 11-ம் தேதி முடிவடைந்தது. விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. சில நாட்களில் ஹால் டிக்கெட்டை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தேசிய தேர்வுகள் முகமை திட்டமிட்டுள்ளது.

நீட் தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அதன்படி, 2017-ல் 11.38 லட்சம் பேர், 2018-ல் 13.26 லட்சம், 2019-ல் 15.19 லட்சம், 2020-ல் 15.97 லட்சம், 2021-ல் 16.14 லட்சம், 2022-ல் 18.72 லட்சம், 2023-ல் 20.87 லட்சம், 2024-ல் 24.06 லட்சம், 2025-ல் 22.76 லட்சம் பேர் விண்ணப்பித்தனர். இதுவரை இல்லாத அளவுக்கு தற்போது 26 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர்.

தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் நீட் தேர்வு நடைபெறும். இத்தேர்வில் 180 கேள்விகள் கேட்கப்படும். ஒரு கேள்விக்கு 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 720 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறுகிறது. தவறான பதிலுக்கு 1 மதிப்பெண் (நெகட்டிவ்) குறைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெரம்பூர் வேட்பாளர் பட்டியலில் 2 விஜய், 2 ஜோசப்! பழைய டெக்னிக் உதவுமா?



**சென்னை, ஏப்.08:**
நடிகரும் தவெக தலைவருமான விஜய் போட்டியிடுவதால், சென்னை பெரம்பூர் தொகுதி அதிக கவனம் பெறும் தொகுதியாக மாறியிருக்கிறது. இந்த தொகுதியின் வேட்பாளர் பட்டியல் வெளியாகியிருக்கிறது.

முன்பெல்லாம் பலருக்கும் எழுத்துக்கூட்டி மட்டுமே படிக்கத் தெரியும். இதனால் ஒரு வேட்பாளர் பெயரில், சில சுயேச்சைகளை எதிர்க்கட்சிகள் களமிறக்கி, உண்மையான கட்சி வேட்பாளருக்கு விழ வேண்டிய வாக்குகளை சுயேச்சைகளுக்குத் தெரியாமல் கிடைத்து, இதனால் வாக்குகள் பிரிக்கப்படும். இது மிக மிக பழைய டெக்னிக்.

ஆனால், இப்போது, பலரும் நன்கு படித்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். குறிப்பாக தவெக தலைவர் விஜய்க்கு வாக்களிக்கக் கூடிய இளைஞர்கள் படித்திருப்பார்கள் என்பதாலும், முன்கூட்டியே வாக்குப்பெட்டியில் எங்கே பெயர் மற்றும் சின்னம் இடம்பெறும் என்பது மக்களுக்கு தேர்தல் ஆணையம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்பதாலும், இந்த பெயர் குழப்பங்கள் எல்லாம் பெரிய அளவில் பலனளிக்காது என்றே தேர்தல் பார்வையாளர்கள் சொல்கிறார்கள்.

இது மிக மிக பழைய டெக்னிக். இருந்தாலும் என்ன நட்டமாகிவிடப்போகிறது என்று முன்னணி கட்சிகளே இந்த உக்திகளை இன்னமும் கடைப்பிடித்து வருகிறார்கள், சில சுயேச்சைகள், தங்களது விளம்பரத்துக்காக இவ்வாறு செய்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப். 23ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் பதிவாகும் வாக்குகள் மே 4ஆம் தேதி எண்ணப்படவிருக்கின்றன.

பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, இன்று வேட்பு மனு பரிசீலனை நடைபெற்றது. இதில் பெரும்பாலான முக்கிய வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், பெரம்பூர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் வெளியாகியிருக்கிறது. அதில், விஜய் என்ற பெயரில் தவெக தலைவர் தவிர்த்து இரண்டு பேரும், ஜோசப் என்ற பெயரில் விஜய் தவிர்த்து இரண்டு பேரும் வேட்பு மனு தாக்கல் செய்து களத்தில் உள்ளனர்.

பெரம்பூர் தொகுதியில் இரண்டு விஜய், 2 ஜோசப் என மொத்தம் 40 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இதில் ஜி. விஜய், கே. விஜய், எஸ். ஜோசப், எம். ஜோசப் ஆகியோரும் அடங்குவர்.

தமிழ்நாட்டில் பேரவைத் தேர்தலுக்கான பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 30-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கிய நிலையில், மனுத் தாக்கலுக்கு கடைசி நாளான நேற்று (ஏப்.6) எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

## கல்பாக்கம் அணு உலை சோதனை: விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு



**செங்கல்பட்டு, ஏப்.08:**
செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, புதிய அணுமின் நிலையம் கடந்த 2004-ம் ஆண்டிலிருந்து பாவினி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. கடந்த 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி, மேற்கண்ட புதிய அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், தோரியத்திலிருந்து நியூட்ரான் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இது படிப்படியாக முன்னேறி மின் உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளது.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

இந்தியா தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுத்து, அணுசக்தி பயணத்தில் முக்கியமான அடியை எடுத்து வைத்துள்ளது.

கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன் மாதிரி வேக அணு உலை நிலை மாற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த மேம்பட்ட அணு உலை, நமது அறிவியல் திறனின் ஆழத்தையும், பொறியியல் துறையின் வலிமையையும் பிரதிபலிக்கிறது.

இந்தியாவுக்கு இது பெருமைக்குரிய தருணம். நமது விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள் என பதிவிட்டுள்ளார்.

## “மதுரை மெட்ரோ திட்ட அறிக்கையை கூட முறையாக தயாரித்து தரவில்லை”

### முதல்வர் ஸ்டாலின் மீது அண்ணாமலை சாடல்



**சென்னை, ஏப்.08:**
‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின் முறையாகத் தயாரித்துக் கொடுக்கவில்லை’ என தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, முறையாகத் தயாரித்துக் கொடுக்க இயலாத கையாலாகாத திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின்.

மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறியதன் பொருள் என்னவென்றால், தமிழகத்தில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அமையவிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில், விரிவான திட்ட அறிக்கை முறையாகத் தயாரிக்கப்பட்டு, மதுரை மெட்ரோ திட்டத்துக்கான அனுமதி பெறப்படும் என்பதுதான்.

ஆட்சிக்கு வந்தவுடன், வெளிநாட்டு முதலீடு ஈர்ப்பு என்ற பெயரில் குடும்பத்துடன் பலமுறை இன்பச் சுற்றுலா சென்றீர்களே... என்ன முதலீடு வந்தது? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது? மத்திய அரசின் திட்டங்களால் பெறும் வளர்ச்சிக்கு, உங்கள் ஸ்டிக்கரை ஒட்ட கூச்சமாக இல்லையா?

உங்கள் ஆட்சியில், குப்பை அள்ளுவதில் கூட ஊழல் செய்து, சென்னை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட மாநகரங்களை குப்பைக் கூடங்களாக மாற்றி, குப்பை மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே. மதுரையில் அமைப்போம் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறிய வேளாண் பல்கலைக்கழகம் எங்கே?’ எனத் தெரிவித்துள்ளார்.

## ரூ.1000 கோடி சொத்து தமிழகத்தின் பணக்கார பெண் வேட்பாளர்



**லால்குடி, ஏப்.08:**
அ.தி.மு.க. சார்பில் லால்குடி தொகுதியில் போட்டியிடும் மார்ட்டினின் மனைவி லீமா ரோஸ். வயது (58). இவர் மார்ட்டின் குழுமத்தின் இயக்குநராக உள்ளார்.

சமூக பணிகளில் முனைவர் பட்டமும், இலக்கியத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். இவருக்கு ரூ.5.52 லட்சம் தொகையும், தனது கணவர் பெயரில் ரூ. 56.48 லட்சம் தொகையும் கையிருப்பாக உள்ளது. மேலும், தனது பெயரில் 19 கிலோ தங்கமும், 1217 கேரட் வைரமும் மற்றும் 13 கிலோ வெள்ளியும், 33 கிராம் பிளாட்டினமும், கணவர் பெயரில் 281 கிராம் தங்கமும், 9.83 கேரட் வைரமும், 21 கிலோ வெள்ளியும் மற்றும் 321 கிராம் மதிப்பிலான முத்துக்களும் உள்ளன.

## நாம் தமிழர் கட்சி கூட்டத்தில் டி.வி.கே. என கூச்சலிட்ட வாலிபர்– சீமான் ஆவேசம்



**புதுச்சேரி, ஏப்.08:**
புதுச்சேரி மேட்டுப்பாளையம் சந்திப்பில் கதிர்காமம் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளரை ஆதரித்து சீமான் பிரசாரம் செய்தார். அப்போது பைக்கில் வந்த ஒருவர் டி.வி.கே., டி.வி.கே என்று கூச்சலிட்டார். ‘ஏன் இங்கு வந்து டீ விக்கிற, அப்படி போய் டீ வித்துட்டு போடா’ என்று சீமான் கூற பதிலுக்கு அவர் திட்டினார்.

ஆத்திரமடைந்த சீமான் ‘டே இங்க வாடா.. இங்க வந்து டீ வித்துட்டு போடா’ என கோபமாக குரல் கொடுத்தார். இதைக் கேட்ட நாம் தமிழர் கட்சி தொண்டர்கள் அந்த நபரை சுற்றிவளைத்து தாக்கினர்.

இதை போலீசார் தடுத்தனர். அப்போது சீமான், ‘நம் கட்சி தொண்டர்கள் அறிவார்ந்தவர்கள், த.வெ.க. கட்சியினர் தற்குறிகள், நீங்கள் போராளியின் பிள்ளைகள், அவர்கள் கோமாளியின் பிள்ளைகள்’ என்று தொண்டர்களை சீமான் சமாதானப்படுத்தினார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## “பாஜகவுடன் ஸ்டாலினுக்கு ரகசிய உடன்பாடு என மம்தா பேசுவது அபத்தம்” – ஜோதிமணி எம்.பி காட்டம்



**சென்னை, ஏப்.08:**
பாஜகவுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு ரகசிய உடன்பாடு உள்ளதாக குற்றம்சாட்டிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இந்தியாவின் ஒரு மூத்த அரசியல்வாதி, மூன்று முறை மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி இப்படிக் கொஞ்சமும் பொறுப்பில்லாமல், உண்மைக்குப் புறம்பாக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், திமுக கட்சிகளை பாஜகவோடு ரகசிய உடன்பாடு வைத்துள்ளார்கள் என்று பேசுவது அபத்தமானது மட்டுமல்ல, கடுமையான கண்டனத்துக்குரியது.

தமிழகத்தில் நாங்கள் பாஜகவுக்கு எதிராக ஒவ்வொரு தினமும் யுத்தம் நடத்திக் கொண்டுள்ளோம். எமது மொழி, இனம், பண்பாடு, வளர்ச்சி அனைத்துக்கும் எதிராக உள்ள பாஜகவை இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதே எங்கள் இலக்கு. அஇஅதிமுக முகமூடி அணிந்து கூட பாஜக தமிழகத்தில் கால்பதித்து விடக்கூடாது என்பதில் எமது தமிழினம் உறுதியோடு உள்ளது.

எமது தலைவர் ராகுல் காந்தி அச்சமற்று அயராது மோடி அரசுக்கும், பாஜகவுக்கும் எதிராக சமரசமற்ற போராட்டத்தை நடத்திவருகிறார். தமிழகத்தின் உரிமைகளுக்காக முதல்வர் திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின் பாஜகவோடு சமரசமற்று போராடி வருகிறார்.

தேசிய அளவில் நாடாளுமன்றத்தில் நாங்கள் பாஜக அரசை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் திமுக எப்பொழுதும் எங்கள் பக்கம் நிற்கிறது. ஆனால் திரிணமூல் காங்கிரஸ் பல நேரங்களில் அப்படிச் செயவதில்லை. ஆனாலும் உங்கள் மீது எந்த அவதூறுகளையும் நாங்கள் பரப்பியதில்லை. ஏனென்றால் பாஜகவுக்கு எதிரான யுத்தத்தில், நாட்டின் நலன் கருதி எதிர்கட்சிகள் ஒன்றாகவே பயணிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீங்களும் அந்த நிலைப்பாட்டிலேயே நில்லுங்கள். அதுதான் மேற்கு வங்கத்துக்கும், இந்தியாவுக்கும் நல்லது.

நீங்கள் 15 ஆண்டு காலம் செய்த சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேளுங்கள். மக்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள். கூட்டணிக் கட்சிகளை அவதூறு செயவதன் மூலம் நீங்கள் அடையக் கூடியது ஒன்றும் இல்லை. தமிழகத்தில் மட்டுமல்ல கேரளம், புதுச்சேரி, அசாம் ,மேற்கு வங்கம் உள்ளிட்ட எந்த மாநிலத்திலும் பாஜக வெல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவைத் தோற்கடித்து, இந்தியாவைப் பாதுகாக்க எமது தலைவர் ராகுல் காந்தி தலைமையேற்று நடத்தும் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்காவிட்டாலும் பரவாயில்லை. பலவீனப்படுத்த முயற்சி செய்யாதீர்கள். இந்த தேசம் உங்களை மன்னிக்காது’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று மேற்கு வங்கத்தில் பிரச்சாரம் செய்த மம்தா பானர்ஜி, “தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சியினர் பாஜகவுடன் ரகசிய உடன்பாடு வைத்துள்ளனர்.

தேர்தல் ஆணையம் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட திறமையான ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகளைத் தமிழகத்துக்கு தேர்தல் பார்வையாளர்களாக அனுப்பியுள்ளது.

இதன் மூலம் மேற்கு வங்கத்தில் பாஜக தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறது. மேற்கு வங்க மாநிலத்தின் முக்கிய பொறுப்புகளில் தங்களுக்குச் சாதகமான அதிகாரிகளை பாஜக அமர்த்துகிறது” என்று அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுப வரும் அனுகவும். 8668107106

ADVERTISE WITH US

CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

PLOT SALE

ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L

9626777627

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு

உங்கள் ஜோதிடர் 9940374962

D.சக்திவேல்

அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)

வீடு மனை வாங்க விற்க அணுகவும்

நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு

லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

WANTED:

செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை

- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107

Call now for more details and interview.

APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®

MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sir Manjal Mart

YOUR DESIRE WE DELIVER

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K

SUPREME

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED


Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## கவிதை அரங்கம்!





என்னுலகமும்
முழுமையாகிறது
உன்னை
அள்ளிக்கொள்ளும்
போது...!

மூச்சுமுட்டும்
நெருக்கத்தில்
இல்லாவிட்டாலும்
பார்வைபடும்
தூரத்திலேனுமிரு
என்னுயிர் வாழ...!

எதையும்
ஆள வேண்டுமென்ற
ஆசையில்லை
உன் அன்பில்
ஆழ்ந்திருக்க
வேண்டுமென்ற
ஆசையை தவிர

சோலையில்
பூத்ததல்ல
உதிர மனச்சோலையில்
பூத்தது மரணம்வரை
மலர்ந்திருக்கும்
காதல் மலர்

## வாழ்க்கை தத்துவம்...



சோகங்கள் அடைமழையா
விழுந்தாலும் சரி ஆலங்கட்டி
மழையா விழுந்தாலும் சரி
சும்மா எருமமாட்டுல மழை
பேஞ்ச மாதிரி அசையாம
நிக்க கத்துக்கனும்

மரணத்திற்குப் பிறகும்
வாழ்க்கை உண்டா
என்று கேட்காதே
உயிருடன் இருக்கும்
போது நீ எப்படி
வாழ்ந்தாய் என்று பார்

அன்பை பிச்சை எடுக்க கூடாது
அக்கறையை கேட்டு வாங்க கூடாது
காதலை கெஞ்சி பெறக் கூடாது
உணர்வுகளை புரிய வைக்க கூடாது

## வாளும் வளைக்காத காதல்



அது சோழப் பேரரசின் ஒரு சிற்றரசு காலம். விக்ரமன் - வேங்கை நாட்டின் தளபதி, வீரத்திற்குப் பெயர் போனவன். மந்தாகினி - அண்டை நாடான மல்லையூர் மன்னனின் ஒரே மகள். இரு நாடுகளுக்கும் இடையே பல தலைமுறைகளாக ஆறாத பகை இருந்தது. எல்லையோரக் காட்டில் ஒரு நாள் வேட்டையாடச் சென்றபோது, புலி ஒன்றிடமிருந்து மந்தாகினியை விக்ரமன் மீட்டான். அந்த முதல் சந்திப்பிலேயே இருவர் கண்களும் மௌன மொழி பேசின. எதிர்நின்ற வாட்கள் நாட்டின் எல்லைக் கோடு அவர்களைப் பிரித்தாலும், அன்பின் எல்லை அவர்களை இணைத்தது. அவர்கள் ரகசியமாகச் சந்தித்த இடமெல்லாம் வீரர்களின் காலடிச் சத்தங்கள் கேட்டன.


ஒருநாள் உண்மை வெளிப்பட்டது. மல்லையூர் மன்னன் சினத்தில் சிவந்தான்; விக்ரமனைத் துரோகி என அவனது நாடே தூற்றியது. "எதிரி நாட்டுப் பெண்ணை மணப்பது குலத்திற்கே இழுக்கு" என வாட்கள் உறை நீங்கின. விக்ரமன் சிறையில் தள்ளப்பட்டான், மந்தாகினிக்கு வேறொரு இளவரசனுடன் திருமண ஏற்பாடுகள் நடந்தன.

திருமண நாளன்று, மல்லையூர் அரண்மனை விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆனால், விக்ரமன் தன் வீரத்தால் சிறையை உடைத்து, மின்னல் வேகத்தில் அரண்மனைக்குள் புகுந்தான். அவன் கையில் வாள் இருந்தது, ஆனால் அதை அவன் யாரையும் வீழ்த்தப் பயன்படுத்தவில்லை. மந்தாகினியின் கையைப் பற்றி, "காதலுக்கு முன் நாடுகள் பெரிதல்ல!" என முழங்கினான். அவனது துணிச்சலைக் கண்டு இரு நாட்டு வீரர்களும் திகைத்து நின்றனர். தன் மகளின் உறுதியையும், விக்ரமனின் வீரத்தையும் கண்ட மல்லையூர் மன்னனின் கண்கள் பனித்தன. ஒரு வீரனின் உண்மையான பலம் அவனது அன்பில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தார்.



**வெ.நாராயணன்**
லால்குடி

## சிரிப்பு வருது.!
## சிரிப்பு வருது.!!



*நண்பன்: ஏன் சார், உங்க மொபைல் போனை மிக்ஸியில போட்டு சுத்திக்கிட்டு இருக்கீங்க?*

*சர்தார்ஜி: வேற ஒன்னுமில்லை தம்பி, போன்ல இருந்து 'இன்கமிங்' (Incoming) கால் வர மாட்டேங்குது, அதான் 'மிக்ஸிங்' (Mixing) பண்ணிப் பார்க்குறேன்!*



## தினம் ஒரு சமையல்



## முட்டை கோஸ் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| ½ கிலோ | -முட்டை கோஸ் |
| 2 மேஜை கரண்டி | -இஞ்சி பூண்டு விழுது |
| 1 | -வெங்காயம் |
| 2 | -தக்காளி |
| 1 | -கை கொத்தமல்லி |
| சிறிதளவு | -புதினா |
| 2 கொத்து | -கருவேப்பிலை |
| ½ தேக்கரண்டி | -பட்டை கிராம்பு ஏலக்காய் பொடி |
| ½ தேக்கரண்டி | -மஞ்சள் தூள் |
| 1 தேக்கரண்டி | -மிளகாய் தூள் |
| 2 தேக்கரண்டி | -மல்லி தூள் |
| 2 | -பச்சை மிளகாய் |
| உப்பு | |
| 75 மில்லி | -கடலெண்ணை |

செய்முறை:



ஒரு கடாயில் அல்லது ஒரு குக்கரில் சுத்தமான எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் இஞ்சி பூண்டு விழுது, பட்டை கிராம்பு ஏலக்காய் பொடி சேர்த்து நன்றாக பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.

பிறகு அதில் மசாலா பொருட்களை சேர்க்கவும்.பின்பு அதில் வெங்காயம்,சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி சேர்த்து வதக்கவும்.

பின்பு அதில் நறுக்கிய முட்டை கோஸ் சேர்த்து நன்றாக கிளறி அதில் கருவேப்பிலை,கொத்தமல்லி,புதினா இவை அனைத்தும் சேர்த்து நன்றாக கிளறி மூடி வைத்து 2 விசில் வந்ததும் இறக்கவும்.

## அசுவகந்தி பயன்கள்



அஸ்வகந்தா ஒரு நம்பகமான மருத்துவ மூலிகையாகும், இது பல சுகாதார நிலைமைகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது

கூந்தலுக்கு அஸ்வகந்தாவைப் பயன்படுத்துவதும் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்

ஆயுர்வேத நடைமுறைகளில் நினைவாற்றலை அதிகரிக்க அஸ்வகந்தா பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது

உடல்நலம் இப்போது பெரும்பாலான மக்களுக்கு முதலிடம் வகிக்கிறது, மேலும் சிலர் இயற்கையான பாதையில் செல்ல தேர்வு செய்கிறார்கள். இதில் ஆயுர்வேத சிகிச்சைகள் அல்லது இயற்கை மருத்துவ மூலிகைகள் ஆகியவை அடங்கும். பொதுவாக பயன்படுத்தப்படும் மூலிகைகளில் அஸ்வகந்தா மற்றும் பல நன்மைகள் உள்ளன. பல சுகாதார நிலைமைகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் நம்பகமான மருத்துவ மூலிகை என்பதால், இந்தியர்கள் பல ஆண்டுகளாக சிறந்த ஆரோக்கியத்திற்காக அஸ்வகந்தா பலன்களைப் பெற்றுள்ளனர்.உண்மையில், பெண்களுக்கான அஸ்வகந்தா நன்மைகள் மனநிலை முன்னேற்றம் முதல் இனப்பெருக்க ஆதரவு வரை இருக்கும் என்று தரவு தெரிவிக்கிறது.

கூந்தலுக்கு அஸ்வகந்தாவை பயன்படுத்துவது நேர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நிச்சயமாக தகுதியைக் கொண்டுள்ளன, மேலும் இயற்கையாகவே ஆரோக்கியமாக இருக்க விரும்புவோருக்கு மகத்தான மதிப்பை வழங்குகின்றன. இருப்பினும், இந்த மூலிகையை அதன் அதிகபட்ச திறனுக்கு உண்மையிலேயே பயன்படுத்த, அது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முக்கிய வழிகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக, மிகவும் பிரபலமான 7 அஸ்வகந்தா நன்மைகள் இங்கே உள்ளன.

## சினிமா

## 18+ இணையதளத்தில் என்னுடைய புகைப்படம்... அதிர்ச்சியில் நடிகை ஜான்வி கபூர்...



பாலிவுட் சினிமாவில் அறிமுகமாகி இன்று இந்திய அளவில் பிரபலமான நடிகையாக இருப்பவர் ஜான்வி கபூர். இவர் நடிப்பில் அடுத்ததாக பெத்தி திரைப்படம் வெளிவரவுள்ளது. இப்படத்தில் ராம் சரணுடன் இணைந்து ஜான்வி கபூர் நடித்து வருகிறார்.

நடிகைகளை தவறாக சித்தரித்து டீப்பேக் செய்த புகைப்படங்கள், வீடியோக்கள் இணையத்தில் வைரலாவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. ராஷ்மிகா மந்தனா, நோரா பதேகி, ஆலியா பட் போன்ற நட்சத்திரங்கள் டீப்பேக் குறித்து தங்களது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நடிகை ஜான்வி கபூர் தனது 15 வயதில், பள்ளியில் படிக்கும்போது தன்னை போன்ற தோற்றத்தில் உருவாக்கப்பட்ட டீப்பேக் புகைப்படம் 18+ இணையதளத்தில் பார்த்ததாக கூறியுள்ளார்.



இதுகுறித்து பேட்டி ஒன்றில் பேசிய ஜான்வி கபூர், "நான் ஒரு 18+ இணையதளத்தில் என்னுடைய புகைப்படத்தை பார்த்தேன். பள்ளியில் ஐடி வகுப்பின்போது இந்த சம்பவம் நடந்தது. சில மாணவர்கள் அந்த வகுப்பில் அந்த மாதிரியான இணையத்தளங்களை பார்த்துக்கொ ண்டிருந்தார்கள். அப்போது என் புகைப்படங்கள் அங்கே இருந்தன. அது உண்மையா அல்லது டீப்பேக்கா என்று அப்போது எனக்கு தெரியவில்லை" என கூறினார்.

மேலும் பேசிய அவர், சில நேரங்களில் அதிகாரப்பூர்வ செய்தி பக்கங்களில் கூட அவர் அணியாத ஆடைகள் அல்லது செய்யாத போஸ்களில் உருவாக்கப்பட்ட படங்கள் பகிரப்படுவதாகவும், இதனால் மனம் அமைதியற்ற நிலையில் இருப்பதாகவும் ஜான்வி கபூர் கூறியுள்ளார்.

இளசுகளை அதிகம் கவர்ந்த நடிகையாக இருந்து வரும் க்ரித்தி ஷெட்டி LIK படத்தின் ரிலீசுக்காக காத்திருக்கிறார். அந்த படம் ஏப்ரல் 10ம் தேதி ரிலீஸ் ஆக இருக்கிறது.

தற்போது க்ரித்தி ஷெட்டி செம ஹாட் உடையில் இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். இதோ..

## 3 நாட்களில் லீடர் திரைப்படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா

லெஜண்ட் சரவணன் தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் முக்கிய நடிகர்களில் ஒருவர். 2022ஆம் ஆண்டு வெளிவந்த லெஜண்ட் திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாகவும், தயாரிப்பாளராகவும் அறிமுகமானார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வெளிவந்த லெஜண்ட் எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்பை பெறவில்லை. கலவையான விமர்சனங்களையும் சந்தித்தது.

முதல் படத்தில் தான் சந்தித்த விமர்சனங்களை எல்லாம் சரி செய்து இரண்டாவது திரைப்படத்தில் செம மாஸான கம்பேக் கொடுத்துள்ளார் லெஜண்ட் சரவணன். ஆம், இவர் நடிப்பில் கடந்த வாரம் வெளிவந்த லீடர் திரைப்படத்திற்கு அமோக வரவேற்பு ரசிகர்கள் மத்தியில் கிடைத்துள்ளது.

இப்படத்தை இயக்குநர் துரை செந்தில் குமார் இயக்க, பாயல் ராஜ்புட், ஆண்ட்ரியா, ஷ்யாம் ஆகியோர் நடித்திருந்தனர்.



ஜிப்ரான் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார். ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகி வெளியான லீடர் திரைப்படம் முதல் நாளில் இருந்து வசூலில் பட்டையை கிளப்பி வருகிறது.

இந்த நிலையில், 3 நாட்களில் உலகளவில் இப்படம் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 3 நாட்களில் லீடர் திரைப்படம் ரூ. 25 கோடி பாக்ஸ் ஆபிஸில் வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களிலும் இப்படத்தின் வசூல் வேட்டை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 16 சொற்களில் கல்யாண ராமாயணம்

((பிறந்தார்,வளர்ந்தார்
,கற்றார், பெற்றார்.
மணந்தார். சிறந்தார்.
துறந்தார். நெகிழ்ந்தார்.
இழந்தார் அலைந்தார்.
அழித்தார்.செழித்தார்.
துறந்தார்.துவண்டார்.
ஆண்டார்.மீண்டார்.!)
~~~~~~

1 பிறந்தார்.
~~~~~
கௌசல்யா தேவிக்கு
தசரதரின் ஏக்கத்தைப்
போக்க..
யாகத்தில் தோன்றிய
மாபூதம் வழியே
திருமாலின் அவதாரமாகப்
பிறந்தாரே.!

2.வளர்ந்தார்.
~~~~~~
தசரதன் மைந்தனாய்..
தருமத்தின் புதல்வனாய்..
கௌசல்யை.. சுமித்திரை..
கைகேயி அன்பிலே..
காருண்யன் இராமர்
வளர்ந்தாரே..!

3.கற்றார்.
~~~~~~
சூரிய வம்சத்தின் குல
குரு.. வசிட்டரிடம்..
வேதங்கள் ஞானங்கள்
கலைகள் போர்
முறைகள்.. யாவையும்
இராமர் கற்றாரே.!

4.பெற்றார்.
~~~~~~
வசிட்டரிடம் கற்ற துனுர்
வேதம் கொண்டு
.. விசுவாமித்திரர்
யாகத்தைக் காத்து.. பல..
அபூர்வ அஸ்திரங்களைப்
பெற்றாரே..!

5.மணந்தார்.
~~~~~~
மிதிலை என்கிற
ஜனகபுரியில்.. சிவனார்
வில்லை உடைத்து..
ஜனகர் சுனயனாவின்
ஏக்கத்தைத் தகர்த்து..
கண்ணோடு கண் நோக்கி
ஜானகியைக் கவர்ந்து..
மண்ணின் மகளான
சீதையை இராமர்
மணந்தாரே.!


6.சிறந்தார்.
~~~~~~
அயோத்யா.. கோசலை
மக்கள் மனதில் உயரிய
குணத்தால்.. பண்பு
நலத்தால் இடம் பிடித்தே
அன்பினில் இராமர்
சிறந்தாரே.!

7.துறந்தார்.
~~~~~~
சிற்றன்னை
கைகேயி
சொற்க் கேட்டு..
தந்தை தசரதரின்
ஆணையாலே..
மரவுரி தரித்து
மனையாள் சீதை..
இலக்குவனோடு
தன்னுடைய
அரசினைத் தம்பி
பரதனுக்குத் தந்து..
வனவாழ்வை ஏற்று..
இராஜியத்தைத்
துறந்தாரே.!

8.நெகிழ்ந்தார்.
~~~~~~
அயோத்தி மக்களின்
அன்பினிலே..
கங்கைக் கரை
வேடன் குகனின்
பாசத்திலே..
ஞானகுரு
பரத்வாஜர் தூய
அன்பினிலே..
பரதரின்
தியாகத்திலே..
தன்னலமற்ற
தம்பியின்
பாசத்திலே..
விசுவாசத்திலே..அத்திரி..
அனுசூயை.. சபரித்தாய்..
ஜடாயு.. வன விலங்குகள்
பறவைகள் தந்த
அன்பிலே.. சுக்கிரீவர்
சேவையிலே..யாவுக்கும்
மேலாய் ஆஞ்சநேயரின்
சேவைக்கு கைமாறு ஏது
செய்வேன்..? என்று ஏங்கி
அணைத்துக் கொண்டு..
அண்ணல் இராமன்
நெகிழ்ந்தாரே!

9.இழந்தார்.
~~~~~~
மாய மானைப் பின்
தொடர்ந்தே.. மனைவி
சீதையை..
கானகத்தில்
ஞான தேவன் மானுடனாக
வந்த இராமபிரான்
இழந்தாரே.!

10.அலைந்தார்.
~~~~~~
இட்ட அடி நோக.. எடுத்த
அடி கொப்பளிக்க.. பட்ட
அடி நினைத்தே.. பாசமிகு
சீதையை பிரிந்தே..
கானத்தே இராமர்
அலைந்தாரே.!



11.
அழித்தார்.
~~~~~~
தங்கையவள்
சூர்ப்பனகை.
நிலைகண்டே..
தாளாத ஆசையிலே..
நெறி பிழன்றே..
அயலான் மனைவியை
நினைத்ததாலே..
ஆதியிலே பெற்ற
சிறப்பெல்லாம் இழந்த..
இலங்கேஸ்வரனை..
இராவணனை களத்திலே
சந்தித்து.. அராஜகம்
ஆளுகின்ற இராவணன்
இராஜியத்தை
அழித்தாரே.!

12.செழித்தார்.
~~~~~~
சீதையை
மீட்டெடுத்து..
அகமும் முகமும்
மலர.. ஆவியை
மீண்டும் பெற்று..
அரசனாய்
மகுடம் சூடி..
வாழ்விலே
இராமன்
செழித்தாரே.!

13.துறந்தார்.
~~~~~~
அரசாண்ட
போதிலே..
அன்னை

சீதையினை..
அறியாது
புரியாது
மக்கள்
பேசிய
வார்த்தைக்காக.. மீண்டும்
ஒருமுறை குழப்பம்
நீங்க.. தூயவள் சீதையை
கானகம் அனுப்பித்
துறந்தாரே.!

14.துவண்டார்.
~~~~~~
சந்தேகக் கோடு.. அது
சந்ததோசக் கேடு..
அவதாரம் ஆயினும்அது
மிகு வலித் தரவே..
சீதையைப் பிரிந்து
மனதில் இராமர்
துவண்டாரே.!

15.ஆண்டார்.
~~~~~~
ஆயிரம் கவலைகள்
மனதிலிருந்தும்..
அவரது முகமோ
அருள் மலர.. மக்கள்
பணிக்கு மகேசனாக..
இராம ராஜியத்தின்
தலைவனாக.. செல்வச்
செழிப்புடன் நாடு
செழிக்க.. அன்புடன்
மக்களை ஆண்டாரே.!

16.மீண்டார்.
~~~~~~
பதினோராயிரம்
ஆண்டுகள் ஆண்டு..
மக்களின் மனதை
அன்பிலே ஆண்டு..
ஒவ்வொரு மாந்தனும்..
இராமனுமாக..
சீதையுமாக மாற்றி..
நல்லாட்சியினை
வழங்கியாண்டு..
ஒருநாள்..
தன்னுடனேதுயோர்
யாவரையும்
அழைத்துக்கொண்டு..
தன் இருப்பிடமான
வைகுண்டத்திற்கு ஸ்ரீ
ராமன் மீண்டாரே.!
சுபம்.
ஜெய் ஸ்ரீராம்.!

# சர் சேத்தூர் சங்கரன் நாயர் வரலாறு

சர் சேத்தூர் சங்கரன் நாயர் CIE (11 ஜூலை 1857 - 24 ஏப்ரல் 1934) ஒரு இந்திய வழக்கறிஞரும் அரசியல்வாதியும் ஆவார், அவர் 1906 முதல் 1910 வரை சென்னையின் தலைமை வழக்கறிஞராகவும் , 1910 முதல் 1915 வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் உயர் நீதிபதியாகவும், 1915 முதல் 1919 வரை வைஸ்ராயின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இந்தியா முழுவதும் கல்வி அமைச்சராகவும் பணியாற்றினார்.
1897 இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் , மேலும் மைலாப்பூர் குழுவை எதிர்த்து எழும்பூர் பிரிவை வழிநடத்தினார்

வி.சி.கோபால்ரத்னத்தின் கூற்றுப்படி , அவர் சி.ஆர். பட்டாபிராம ஐயர் , எம்.ஓ.பார்த்தசாரதி ஐயங்கார் , வி.கிருஷ்ணசாமி ஐயர் , பி.ஆர்.சுந்தரம் ஐயர் மற்றும் சர் வி.சி.தேசிகாச்சாரியார் ஆகியோருடன் சேர்ந்து மெட்ராஸ் பார் தலைவராகவும் , சர் வி.பாஷ்யம் ஐயங்கார் மற்றும் சர் எஸ்.சுப்பிரமணிய ஐயர் ஆகியோருக்குப் பின்னால் இருந்தவராகவும் இருந்தார். அவர் காந்தி மற்றும் அராஜகம் (1922) எழுதினார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி
சேத்தூர் சங்கரன் நாயர் 1857 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதி பாலக்காடு மாவட்டம் மங்காராவில் மம்மயில் குடும்பத்தைச் சேர்ந்த பார்வதி அம்மா சேத்தூர் மற்றும் மம்மயில் ராமுண்ணி பணிக்கர் ஆகியோருக்கு மகனாக சேத்தூர் என்ற குடும்பத்தில் பிறந்தார். சங்கரன் நாயர் தனது குடும்பப் பெயர் சேட்டூர் , தாய்வழி வாரிசு மூலம் பெற்றார்.

அவரது தந்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் தாசில்தாராகப் பணியாற்றினார் . அவரது ஆரம்பக் கல்வி வீட்டிலேயே பாரம்பரிய பாணியில் தொடங்கி, கோழிக்கோட்டில் உள்ள மாகாணப் பள்ளியில் கலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் வரை மலபாரில் உள்ள பள்ளிகளில் தொடர்ந்தது . பின்னர் அவர் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார். 1877 ஆம் ஆண்டில் அவர் தனது கலைப் பட்டம் பெற்றார், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் பட்டம் பெற்றார்.

தொழில்
நாயர் 1880 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் தொடங்கினார். 1884 ஆம் ஆண்டு, சென்னை அரசு அவரை மலபார் மாவட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினராக நியமித்தது . 1908 வரை, அவர் அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞராகவும் , அவ்வப்போது தற்காலிக நீதிபதியாகவும் இருந்தார். 1908 ஆம் ஆண்டு, அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிரந்தர நீதிபதியாக ஆனார் மற்றும் 1915 வரை அந்தப் பதவியில் இருந்தார். கலெக்டர் ஆஷே கொலை வழக்கை விசாரித்த அமர்வில் , அப்போது சென்னை தலைமை நீதிபதியாக இருந்த சி.ஏ. வைட்டுடன் ஒரு சிறப்பு வழக்காக அவர் ஒரு பகுதியாக இருந்தார்.
அவரது மிகவும் பிரபலமான தீர்ப்பில், அவர் இந்து மதத்திற்கு மாறுவதை ஆதரித்தார், மேலும் அத்தகைய மதம் மாறியவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் அல்ல என்று தீர்ப்பளித்தார். அவர் சென்னை மதிப்பாய்வு மற்றும் சென்னை சட்ட இதழை நிறுவி திருத்தினார்.

இதற்கிடையில், 1902 ஆம் ஆண்டில், வைஸ்ராய் லார்ட் கர்சன் அவரை ராலே பல்கலைக்கழக ஆணையத்தின் செயலாளராக நியமித்தார். அவரது சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக, 1904 ஆம் ஆண்டில் மன்னர்-பேரரசரால் இந்தியப் பேரரசின் துணைவராக நியமிக்கப்பட்டார் , மேலும் 1912 இல் அவருக்கு நைட் பட்டம் வழங்கப்பட்டது. 1915 ஆம் ஆண்டில் கல்வித் துறையின் பொறுப்புடன் வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினரானார் .
உறுப்பினராக, அவர் 1919 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த அறிக்கைகளில் இரண்டு கருத்து வேறுபாடுகளை எழுதினார், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி சீர்திருத்தங்களை பரிந்துரைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது பெரும்பாலான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது.

"நாட்டை ஆள வேண்டுமென்றால், ஜாலியன் வாலாபாக்கில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட வேண்டும், எந்த ஒரு சிவில் அதிகாரியும் எந்த நேரத்திலும் இராணுவத்தை வரவழைத்து, இருவரும் சேர்ந்து ஜாலியன் வாலாபாக்கில் நடந்தது போல் மக்களைக் கொன்று குவிக்க வேண்டும் என்றால், இந்த நாடு வாழத் தகுதியற்றது" - சி. சங்கரன் நாயர்
இந்தப் புத்தகம் பஞ்சாபின் லெப்டினன்ட் கவர்னரான சர் மைக்கேல் ஓ'ட்வயரை படுகொலையில் பங்கு வகித்ததற்காகக் கண்டனம் செய்தது, இது 1924 இல் நாயருக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடர வழிவகுத்தது. இராணுவச் சட்டம் விதிக்கப்படுவதற்கு முன்பு சிவில் அரசாங்கம் செய்த அட்டூழியங்களுக்கு ஓ'ட்வயர் மீது பயங்கரவாதக் குற்றம் சாட்டினார், அவரைப் பொறுப்பேற்கச் செய்தார்.

விசாரணையில் சாட்சியங்கள் பற்றிய செய்திகள் தி டைம்ஸ் இதழில் தினமும் வெளியிடப்பட்டன.
தோல்வியடைந்த போதிலும், அட்டூழியங்களை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தை இந்த வழக்கு அடைந்ததாக நாயரின் குடும்பத்தினர் கூறுகின்றனர். தி கேஸ் தட் ஷூக் தி எம்பயர் என்ற புத்தகத்தை தனது மனைவி புஷ்பாவுடன் இணைந்து எழுதிய நாயரின் கொள்ளுப் பேரன் ரகு பலாட், இந்த வழக்கு "சுதந்திர இயக்கத்திற்கு ஒரு கொந்தளிப்பை" ஏற்படுத்த உதவியது என்று கூறுகிறார்.



சங்கரன் நாயர், அக்கால நாயர் பிரபுத்துவத்தின் தாய்வழி மரபுகளின்படி, இளம் வயதிலேயே பாலட் குன்ஹிமலு அம்மா அல்லது பார்வதி அம்மாவை மணந்தார். 1926 ஆம் ஆண்டு இன்றைய உத்தரகண்டில் உள்ள புனித பத்ரிநாத் கோவிலுக்கு யாத்திரை மேற்கொண்டபோது, அவர் அவருக்கு முன்னதாகவே இறந்தார் . இந்த தம்பதியருக்கு ஆறு குழந்தைகள் இருந்தனர்.

அவர்களின் மூத்த மகள் பார்வதி அம்மா (பின்னர் லேடி மாதவன் நாயர்) தனது உறவினரான சர் சி. மாதவன் நாயரை மணந்தார் , அவர் ஒரு சட்ட வல்லுநரும் பிரிவி கவுன்சிலின் நீதிபதியுமானவர். அவர்கள் சென்னையில் லின்வுட் என்று அழைக்கப்படும் ஒரு பெரிய தோட்டத்தில் வசித்து வந்தனர். இந்த சொத்துக்குள், இப்போது லேடி மாதவன் நாயர் காலனி/மகாலிங்கபுரம் என்று அழைக்கப்படும் பகுதியில், ஐயப்பன்-குருவாயூரப்பன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது, இந்த நிலம் லேடி மாதவன் நாயரால் நன்கொடையாக வழங்கப்பட்டது. லின்வுட் அவென்யூ - வீட்டின் பெயர்களையும், சர் மற்றும் லேடி நாயரின் குழந்தைகளின் பெயர்களையும் கொண்ட பல சாலைகள் இன்னும் உள்ளன - பாலட் நாராயணி அம்மா சாலை, பாலட் சங்கரன் நாயர் சாலை, பாலட் மாதவன் நாயர் சாலை.
இளைய மகள் சரஸ்வதி அம்மா, அல்லது அனுஜி, புகழ்பெற்ற ராஜதந்திரி கே.பி. எஸ். மேனனை மணந்தார் . கே.பி.எஸ். மேனன் என்றும் அழைக்கப்படும் அவர்களின் மகன் மற்றும் பேரன் சிவசங்கர் மேனன் ஆகியோரும் வெளியுறவு செயலாளராக பணியாற்றிய இராஜதந்திரிகளாக இருந்தனர் . சிவசங்கர் மேனன் இந்தியாவின் 4வது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றினார் .
அவர்களின் ஒரே மகன் ஆர்.எம். பலட்டும் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல்வாதியாக இருந்தார். ஒரு மகள் எம்.ஏ. கேண்டெத்துக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். அவர்களின் மகன், லெப்டினன்ட் ஜெனரல் குன்ஹிராமன் பாலட் கேண்டெத், 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது மேற்கு இராணுவத் தளபதியாகவும் , கோவாவின் விடுதலை வீரராகவும் இருந்தார் . கேண்டெத்தின் மருமகனும், சர் சங்கரன் நாயரின் கொள்ளுப் பேரனுமான அனில் மேனன் , ஒரு நாசா விண்வெளி வீரர். மற்றொரு மகள் எம். கோவிந்தன் நாயருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
மற்றொரு மகள் டி.கே. மேனனை மணந்தார். சங்கரன் நாயரின் பேரன் மருமகன் வி.எம்.எம். நாயர் , 2021 இல் இறந்தபோது இந்தியாவில் எஞ்சியிருந்த மூத்த ஐ.சி. எஸ் அதிகாரி ஆவார். அவரது பேரன் மருமகன் (மருமகள் அம்முகுட்டி அம்மாவின் மகன்) கே.கே. செத்தூர் , ஒரு ஐ.சி.எஸ் அதிகாரி, அவர் ஜப்பானுக்கான இந்தியாவின் முதல் தூதராகவும் பணியாற்றினார். அரசியல்வாதி மற்றும் சோசலிஸ்ட் ஜெயா ஜெட்லியின் தந்தை இவர், அவரது கணவர் அசோக் ஜெட்லி ஜம்மு-காஷ்மீரின் தலைமைச் செயலாளராக இருந்தார். ஜெயாவின் மகள் அதிதி முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜாவை மணந்தார் . சங்கரன் நாயரின் மற்றொரு பேரன் மகன் பி.பி. நாராயணன் (சேத்தூர் நாராயணன் நாயரின் மகன்), மலேசியாவில் ஒரு புகழ்பெற்ற உலக தொழிற்சங்கவாதி மற்றும் தலைவர் (மொரைஸ் 1984, அறிமுகப் பக்கங்கள்).
~~~~~~

## மாம்பழம் சின்னத்தை முடக்க கோரி மேல்முறையீடு செய்யலாம்: ராமதாஸுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.8:**

மாம்பழம் சின்னத்தை முடக்ககோரும் பாமக நிறுவனர் ராமதாஸின் மனுவை மூன்று நாள்களுக்குள் விசாரித்து தீர்ப்பு அளிக்க சிவில் நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, பாமக நிறுவனரின் மனுவை விசாரித்த சென்னை பெருநகர சிவில் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து, தேர்தல் ஆணையத்தை நாட கடந்த 27-ம் தேதி அறிவுறுத்தியது.

இந்த உத்தரவை எதிர்த்த பாமக நிறுவனர் ராமதாஸின் சார்பில் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜோய்மால்யா, பக்சி அடங்கிய அமர்வு விசாரித்தது. பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் விகாஸ் சிங் ஆஜராகி, சிவில் நீதி மன்றம் மாம்பழம் சின்னத்தை முடக்க மறுத்து விட்டது, தேர்தல் ஆணையத்தை நாட அறிவுறுத்தியுள்ளது. தேர்தல் ஆணையம் ராமதாஸையோ, அன்புமணியையோ பாமகவின் தலைவராக அங்கீகரிக்கவில்லை என்பதை டெல்லி உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்குவதற்கு முன் தீர்வு காணவேண்டும். தேர்தல் ஆணையம் நாளையே முடிவு எடுக்க வேண்டும் என்று வாதிட்டார்.

அன்புமணி தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோஹ்தகி, மீனாட்சி அரோரா ஆகியோர் ஆஜராகி, மாம்பழம் சின்னத்தை முடக்கி பாமகவை அழிக்க முற்படுகிறார். மாம்பழம் சின்னம் பொதுசின்னம் இல்லை என்று சிவில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்று வாதிட்டனர். முன்னதாக தலைமை நீதிபதி,

எதிர்மனுதாரரான மகன் எப்படி வெற்றி பெறக்கூடாது என்று தந்தை நினைத்தால் அதை வாக்காளர்களிடம் சென்று தெரிவிக்க வேண்டும் என்றார். நீதிபதி ஜோய்மால்யா பக்சி, மனுதாரின் வாதம் அரசியல்ரீதியான அழிவை உருவாக்கும். வெற்றி பெற்றால் மாம்பழம் சின்னம் கிடைக்காமல் போகும் என்று தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களுக்கு பிறகு, சென்னை சிவில் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிய மனுவை மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டும். தேர்தல் அவசரத்தை கருத்தில் கொண்டு தாக்கல் செய்யப்படும் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் விரைந்து விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு மேல்முறையீட்டு மனுவை முடித்து வைத்தனர்.

## கவுரவ் கோகாய் மனைவிக்கு பாகிஸ்தானில் வங்கி கணக்கு: அசாம் முதல்வர் மனைவி புகார்

**புதுடெல்லி, ஏப்.8:**

அசாம் காங்கிரஸ் எம்.பி கவுரவ் கோகாய் மனைவிக்கு பாகிஸ்தான் வங்கி கணக்கும் உள்ளது பற்றி தெரிவிக்க முடியுமா? என அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வாவின் மனைவி ரினிகி சர்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மாவின் மனைவி ரினிகி சர்மாவிடம் 3 நாடுகளின் பாஸ்போர்ட்டுகள் உள்ளதாக காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் பவன் கெரோ நேற்று முன்தினம் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் இதற்கு நேற்று பதில் அளித்த ரினிகி சர்மா கூறியதாவது: என்னிடம் 3 நாடுகளின் பாஸ்போர்ட்டுகள் உள்ளதாக எதிர்க்கட்சியின் கூறுவது நகைப்புக்குரியதாக உள்ளது. எனது குடும்பத்தினர் யாரும் வெளிநாடுகளில் தொழில் செய்யவில்லை. எங்களுக்கு வெளிநாட்டில் சொத்துகளும் இல்லை. காங்கிரஸ் எம்.பி கவுரவ் கோகாயின் மனைவிக்கு பாகிஸ்தான் வங்கி கணக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது. அத்தகவலை நீங்கள் பொதுவில் வெளியிட முடியுமா? இவ்வாறு ரினிகி சர்மா கூறியுள்ளார்.

## இந்தியாவுக்கு முதலிடம் என்பதே எங்களது தாரக மந்திரம்: பாஜக 47-வது நிறுவன தினத்தில் பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி, ஏப்.8:**



பாஜகவின் 47-வது நிறுவன நாளை முன்னிட்டு, நாடு முழுவதும் உள்ள கட்சித் தொண்டர்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், எதிலும் இந்தியாவுக்கே முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் பாஜக தொடர்ந்து இயங்கி வருவதாக அவர் பெருமிதத்துடன் கூறினார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: பாஜக எப்போதும் தேச நலனுக்கே முன்னுரிமை அளித்து வருகிறது. சமூக சேவை செய்வதிலும், நாட்டை முன்னேற்றுவதிலும் எமது கட்சி முன்னணியில் நிற்கிறது. அடிமட்ட அளவில் தன்னலமற்ற சேவையைத் தொடர்ந்து வழங்கி வரும் லட்சக் கணக்கான தொண்டர்களின் உழைப்பால் கட்சியின் சித்தாந்தம் கடைக்கோடி மக்களையும் சென்றடைந்துள்ளது.

கடந்த பல தசாப்தங்களாகக் கட்சியின் வளர்ச்சிக்காகத் தியாகம் செய்த எண்ணற்ற தொண்டர்களின் தியாகத்தை இந்த நாளில் நினைவுகூர்கிறோம். மக்களின் நலனை மையமாகக் கொண்டே மத்திய அரசும், பாஜக ஆளும் மாநில அரசுகளும் செயல்படுகின்றன.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய எங்களது பயணம் தொய்வில்லாமல் தொடரும். நமது கூட்டு உறுதிப்பாடு இந்தியாவை முன்னேற்றத்தின் புதிய உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். இவ்வாறு பிரதமர் பதிவிட்டுள்ளார்.

## "நாட்டை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாருமில்லை என மோடி நினைக்கிறார்" – ராகுல் விமர்சனம்

**பாலக்காடு, ஏப்.8:**



"இந்தியாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பிரதமர் மோடி நினைக்கிறார். அதேபோல், கேரளாவை வழிநடத்ததன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பினராயி விஜயன் நினைக்கிறார்" என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

கேரள சட்டப்பேரவைத் தேர்லை முன்னிட்டு பாலக்காட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, "இந்தியாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று நினைக்கும் ஒரு நபர் டெல்லியில் இருக்கிறார். அதேபோல், கேரளாவை வழிநடத்ததன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று நினைக்கும் ஒரு நபர் இங்கே இருக்கிறார். இவர்களின் ஆணவத்தைப் பாருங்கள். இவர்கள் இருவரும் ஒரே கூட்டணியில் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்கிறார்கள்.

இடது ஜனநாயக முன்னணியின் பிரச்சார விளம்பரம் ஒன்றை நீங்கள் கவனித்தீர்களா? அதில் கேரள முதல்வரின் படத்தின் கீழே வேறு யார் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. அவரைத் தவிர வேறு யாராலும் கேரளத்தை நிர்வகிக்க முடியாது என்பது போன்ற ஒரு தோற்றத்தை அந்த விளம்பரம் உருவாக்குகிறது.

பிரதமர் மோடி பேசும்போதெல்லாம் கடவுள் குறித்தும் இந்து மதம் குறித்தும் பேசுகிறார். ஆனால், கேரளாவின் சபரிமலை குறித்தோ அல்லது சபரிமலையில் திருடப்பட்ட தங்கம் குறித்தோ அவர் பேசுவதில்லை.

நான் பாஜகவை எதிர்த்துப் போராடுகிறேன். அமலாக்கத் துறையினரால் 55 மணி நேரம் விசாரிக்கப்பட்டேன். தற்போதும்கூட நான் பிணையில்தான் வெளியே உள்ளேன். எனது மக்களவை உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்டது. அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, பாஜகவின் ஊடகப் பிரிவு ஆகியவற்றின் முக்கிய இலக்காக நான் இருக்கிறேன் என்றார்.

## தேர்தலுக்கு முன் மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலா? - மம்தா பானர்ஜி சர்ச்சை பேச்சு

**புதுடெல்லி, ஏப்.8:**

மேற்கு வங்கத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், "தேர்தலுக்கு முன்னதாக மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலை நடத்த பாஜக திட்டமிட்டுள்ளதா?" என முதல்வர் மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பியுள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் புயலை கிளப்பியுள்ளது. மம்தாவின் இந்த சர்ச்சைப் பேச்சுக்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், நாடியா மாவட்டத்தில் உள்ள பெதுவாடஹரி பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி பேசியதாவது: பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் காஜா ஆசிப், கொல்கத்தாவைத் தாக்குவோம் என மிரட்டல் விடுத்துள்ளார்.



இந்த சூழ்நிலையில், கூச் பெஹார் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் பிரச்சாரம் செய்த பிரதமர் நரேந்திர மோடி, ஏன் இந்த மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கவில்லை? இதன் பின்னணி என்ன? தேர்தலுக்கு முன்பாக மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலை நடத்த ஏதேனும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா? மத்திய அரசு மேற்கு வங்க மக்களைக் குறிவைத்தால், அதனை நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். இந்தியக் குடிமக்களாகிய நாங்கள் இதுபோன்ற மிரட்டல்களைச் சகிக்க மாட்டோம். நீங்கள் (பிரதமர்) ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நீங்கள் பதவி விலக வேண்டும்.

இவ்வாறு மம்தா பேசினார்.

## "கேரளாவில் எல்டிஎஃப், பாஜக இடையே ரகசிய ஒப்பந்தம்" – பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு

**கண்ணூர், ஏப்.8:**

கேரளாவில் எல்டிஎஃப் - பாரதிய ஜனதா கட்சி இடையே ஒரு ரகசிய ஒப்பந்தம் உள்ளதாக காங்கிரஸ் எம்.பி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டினார்.

கேரளாவின் பேராவூரில் நடந்த பிரச்சாரத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி, "கேரள சட்டப்பேரவை தேர்தலில் எல்டிஎஃப், பாஜக இடையே ஒரு ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சபரிமலையில் மிகப் பெரிய அளவிலான தங்கம் திருட்டு நடந்திருப்பதை நாம் பார்த்தோம். ஆனால், அது குறித்துப் பிரதமரிடமிருந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை. கடந்த ஓராண்டுக்கும் மேலாக நான் வயநாடு தொகுதியின் மக்களவை உறுப்பினராக இருந்து வருகிறேன். எனவே, நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் நான் மிக நெருக்கமாகக் காண்கிறேன். உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியை அளிப்பதற்காக நீங்கள் அனைவரும் எவ்வளவு கடுமையாகப் போராடி உழைக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. ஆனால், கேரளத்தில் நல்ல கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இருப்பதில்லை. அப்படியே வேலை கிடைத்தாலும், அந்த வேலைகள் மாநிலத்துக்கு வெளியில்தான் அமைகின்றன" என்று குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில், இந்திரா காந்தி போல ஆடையணிந்து, கையில் ரோஜாவுடன் இருந்த சிறுமியை பிரியங்கா காந்தி மேடைக்கு அழைத்து, அவரின் செய்கையை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். இது அந்தப் பிரச்சார நிகழ்வில் ஒரு நெகிழ்ச்சியான தருணத்தை உருவாக்கியது.

2026 கேரள சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு ஏப்ரல் 9-ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதியும் நடைபெறுகிறது.

## "கேரள முதல்வரின் சொந்த மாவட்டத்தில் கூட வளர்ச்சி இல்லை" – டி.கே.சிவகுமார் விமர்சனம்

**திருவனந்தபுரம், ஏப்.8:**

"கேரள முதல்வர் பினராயி விஜயனின் சொந்த மாவட்டத்தில் கூட எவ்வித முன்னேற்றமும் இல்லை" என்று கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரும், கர்நாடக துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் விமர்சித்தார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே. சிவகுமார், "எல்டிஎஃப் அரசு கேரளாவுக்கு என்னதான் வளர்ச்சித் திட்டங்களை செய்துள்ளது? கண்ணூர் என்பது முதல்வரின் சொந்த மாவட்டம். அங்குள்ள பல கட்சித் தொண்டர்களிடம் நான் பேசினேன். இந்த மாவட்டத்துக்கு ஏதேனும் சுற்றுலா மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் வந்துள்ளனவா என்று நான் அவர்களிடம் கேட்டேன். இந்த மாவட்டத்துக்காக எதுவும் செய்யப்படவில்லை என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

முதல்வரின் சொந்த மாவட்டமே வளர்ச்சியடையாத நிலையில், ஒட்டுமொத்த மாநிலத்தின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்" என்று கூறினார். இதற்கிடையில், கேரளாவின் பேராவூரில் பேசிய காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, "நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் நான் மிக நெருக்கமாகக் காண்கிறேன். நான் சந்திக்கும் மக்கள் அனைவரும் நல்ல கல்வித் தகுதி பெற்றவர்கள்.

கேரளாவில் நன்கு படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருப்பதில்லை; அப்படியே வேலை கிடைத்தாலும், அந்த வேலைகள் மாநிலத்துக்கு வெளியேதான் உள்ளன. கேரளாவுக்குள் வேலை வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், மக்கள் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது" என்று கூறினார்.

## உயிரோடு இருக்கும்போதே இறுதிச் சடங்கு விருந்துக்கு அழைப்பு விடுத்த முதியவர்

**லக்னோ, ஏப்.8:**

உத்தர பிரதேச மாநிலம் ஆரையா பகுதியைச் சேர்ந்த முதியவர் ராகேஷ் யாதவ் (65). சொந்த நிலம் இல்லாத காரணத்தால் இவருக்கு திருமணம் ஆகவில்லை.

இவரது இரு சகோதரர்களும் இறந்து விட்டனர். இவருக்கு திருமணம் ஆகாத ஒரு சகோதரி மட்டும் உள்ளார். இவரது முன்னோர்கள் வசித்த வீட்டையும், உறவினர் ஒருவருக்கு வழங்கிவிட்டு, கூடாரத்தில் ராகேஷ்யாதவ் வசித்து வருகிறார்.

சொந்தம், பந்தம் இல்லாமல் சோகத்துடன் வாழ்ந்து வந்த ராகேஷ் யாதவுக்கு, தான் இறந்துவிட்டால், தனக்கு ஈமச் சடங்கு நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்துவதற்கு ஒருவரும் இல்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது.

அதனால்தான் உயிரோடு இருக்கும் போதே, இறப்புக்கு பின் அளிக்கப்படும் விருந்து நிகழ்ச்சியை (பந்தாரா) நடத்த விரும்பினார். இதற்காக அழைப்பிதழ் அச்சிட்டு 1,900 பேருக்கு அழைப்பு விடுத்தார். இதில் பலர் கலந்து கொண்டனர். ஈமக்கிரியை பூஜைக்குப் பின் அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது.

இது குறித்து ராகேஷ் கூறுகையில், "எனக்கு உறவினர் யாரும் இல்லை. அதனால் நான் உயிரோடு இருக்கும்போதே பந்தாரா நடத்த விரும்பினேன்" என்றார்.

## மகளின் விவாகரத்தை இனிப்புடன் கொண்டாடிய ஓய்வு பெற்ற நீதிபதி




**மீரட், ஏப்.8:**

இந்தியக் குடும்பங்களில் விவாகரத்து என்பது இன்றும் ஒரு சமூகக் களங்கமாகவே பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், தனது மகளின் விவாகரத்தை மேளதாளங்கள் முழங்க இனிப்பு வழங்கி கொண்டாடி உள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் மீரட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதியான ஞானேந்திர சர்மாவின் ஒரே மகள் பிரணிதா. இவருக்கும் இந்திய ராணுவத்தில் மேஜராகப் பணியாற்றும் கவுரவ் அக்னிஹோத்ரி என்பவருக்கும் கடந்த 2018ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகன் உள்ள நிலையில், புகுந்த வீட்டில் பிரணிதா தொடர்ந்து கொடுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளார்.

இதனால், பிரணிதா விவாகரத்து கோரி குடும்ப நல நீதிமன்றத்தை அணுகினார். நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, நீதிமன்றம் அவருக்கு விவாகரத்து வழங்கி உத்தரவிட்டது. தீர்ப்பு வெளியான உடனே, நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே காத்திருந்த தந்தை ஞானேந்திர சர்மா மற்றும் உறவினர்கள், மேளதாளங்கள் முழங்க உற்சாகமாகக் கொண்டாடினர். அங்கிருந்தவர்களுக்கு லட்டுகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்தக் கொண்டாட்டத்தின் போது பிரணிதாவின் குடும்பத்தினர் கருப்பு நிற டி-சர்ட் அணிந்திருந்தனர்.

அதில் பிரணிதாவின் புகைப்படத்துடன், "எனது மகளை நேசிக்கிறேன்; அவளே எனது இதயம், எனது ஆன்மா" என்ற வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. பிரணிதா அணிந்திருந்த உடையில் "எனது குடும்பம் எனது உயிர்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து பிரணிதா கூறுகையில், "இதுபோன்ற கடினமான காலங்களில் தோள் கொடுக்கும் எனக்கு கிடைத்த போன்ற குடும்பம் போன்று அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறேன்" என்றார்.

## ஹைதராபாத்தில் நக்சலைட் கமாண்டர் சரண்: ஆயுதங்களுடன் மேலும் 40 பேர் சரணடைந்தனர்

**ஹைதராபாத், ஏப்.8:**



தெலங்கானாவில் நக்சலைட் கமாண்டர் மல்லா தனது சகாக்கள் 40 பேருடன் ஹைதராபாத் போலீஸார் முன்னிலையில் நேற்று சரண் அடைந்தார்.

நக்சலைட்கள் இல்லா நாடாக இந்தியாவை உருவாக்க மத்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. இதில் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் நக்சலைட்கள் பலர் என்கவுன்ட்டர் செய்யப்பட்டனர். மேலும் அரசின் பொதுமன்னிப்பு மற்றும் மறுவாழ்வு கொள்கை காரணமாக நக்சலைட்கள் பலர் தாமாக முன்வந்து சரண் அடைந்தனர்.

தெலங்கானாவில் கடந்த ஜனவரி 2-ம் தேதி, கொரில்லா பிரிவின் கமாண்டர் பர்ஸா தேவா என்கிற தேவண்ணா சரண் அடைந்தார். பிறகு கடந்த பிப்ரவரி 22ம் தேதி மத்திய நக்சலைட் இயக்க உறுப்பினர் திப்பிரி திருப்பதி என்கிற தேஜி (62), சீனியர் நக்சலைட் மல்லா ராஜி ரெட்டி உட்பட 20 பேர் சரண் அடைந்தனர். மேலும் 120 நக்சலைட்கள், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி முன்னிலையில் கடந்த மார்ச் 7-ம் தேதி ஆயுதங்களுடன் சரண் அடைந்தனர்.

இந்நிலையில் நக்சலைட் கொரில்லா பிரிவின் முக்கிய நபராக செயல்பட்டு வந்த சோதி கேஷாலு என்கிற மல்லா நேற்று தனது சகாக்கள் 40 பேருடன் ஹைதராபாத்தில் போலீஸ் அதிகாரிகள் முன்னிலையில் சரண் அடைந்தனர். அப்போது ஏகே 47 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை இவர்கள் ஒப்படைத்தனர்.




# கஞ்சா விற்ற 2 பேர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, ஏப்.08:** திருநெல்வேலி மாவட்டம், மானூர், சுப்பையாபுரம் பகுதியை சேர்ந்த முத்தையா மகன் பொன்பாண்டி (வயது 20) மற்றும் சத்திரம்புதுக்குளத்தை சேர்ந்த வெங்கடேஷ் மகன் ஸ்ரீனிவாசபெருமாள்(21) ஆகிய 2 பேரும் சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மானூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருண்குமார், மேற்சொன்ன 2 வாலிபர்கள் மீதும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவரது வேண்டுகோளின்பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், மேற்சொன்ன 2 பேரும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று முன்தினம் அடைக்கப்பட்டனர்.

# அருமனையில் பெண்ணுடன் ரகசிய தொடர்பில் இருந்த தொழிலாளி மீது கொலை வெறி தாக்குதல்





**அருமனை, ஏப்.08:** அருமனை அருகே பெண்ணுடன் திருமணத்தை மீறிய உறவில் வாழ்ந்த தொழிலாளியை தாக்கிய கணவரை போலீசார் கைது செய்தனர். தலைமறைவான 3 பேரை போலீசார் தேடி வருகின்றனர். குலசேகரம் அருகே ஈஞ்சகோடு பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் (48).

அவரது மனைவி லதா (44). இந்த தம்பதிக்கு 2 மகன்கள் உள்ளனர். ஜஸ்டின் அடிக்கடி மது குடித்து விட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்து வந்ததாக தெரிகிறது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அருமனை பகுதியை சேர்ந்த அஜி (52) என்பவர் ரப்பர் பால் வெட்டும் வேலைக்காக ஈஞ்சகோட்டில் ஜஸ்டின் வீட்டருகே குடி வந்துள்ளார். அப்போது அஜி, லதா இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது.

நாளடைவில் பழக்கம் தீவிரமடைந்தது. இதையடுத்து அஜி அருமனை அருகே காரோடு பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளார். அதைத்தொடர்ந்து லதா கணவரை விட்டு பிரிந்து ஒரு மகனுடன் அந்த வாடகை வீட்டில் குடியேறினார். அஜி அவ்வப்போது வீட்டுக்கு வந்து சென்றதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இது குறித்து அஜியின் குடும்பத்தினருக்கு தெரியவந்து உள்ளது. இதற்கு குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்தால் அவர் லதாவுடன் நிரந்தரமாக தங்கியுள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வீட்டில் லதா, அஜி இருந்துள்ளனர். அப்போது அங்கு லதாவின் கணவர் ஜஸ்டின், விஜித் உள்பட 4 பேர் வந்துள்ளனர்.

அவர்கள் வீட்டின் ஜன்னல், கதவுகளை அடித்து உடைத்தனர். தொடர்ந்து வீட்டுக்குள் சென்று அங்கிருந்த அஜியை சரமாரியாக ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். தடுக்க வந்த லதாவை சாவியால் குத்தினர். இதையடுத்து கொலை மிரட்டல் விடுத்துவிட்டு 4 பேரும் அங்கிருந்து தப்பி சென்றுவிட்டனர். இவர்கள் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் இருவரையும் மீட்டனர்.

இதுகுறித்த தகவலின் பேரில் அருமனை இன்ஸ்பெக்டர் கமலாதேவி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று, சுயநினைவை இழந்து கிடந்த அஜியை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கும், லதாவை அருமனை அரசு மருத்துமனைக்கும் அனுப்பி வைத்தனர்.

அஜி மேல் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து ஜஸ்டின் உள்பட 4 பேரை வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில் அருமனையில் பதுங்கி இருந்த ஜஸ்டின் மற்றும் அவரது நண்பர்கள் அஜித், சந்தீப் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# அன்னமய்யா மாவட்டம் புங்கனூர் வனப்பகுதியில் பயங்கரம் மகன் கண்முன்னே குடியாத்தம் வாலிபர் அடித்துக்கொலை

**திருமலை, ஏப்.08:** அன்னமய்யா மாவட்டம் புங்கனூர் வனப்பகுதியில் குடியாத்தம் வாலிபர் அடித்துக்கொலை செய்யப்பட்டது தெரியாமல் இரவு முழுவதும் காட்டில் அவரது சடலத்துடன் மகன் இருந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வேலூர் மாவட்டம் குடியாத்தத்தை சேர்ந்த வாலிபர் காந்தி. இவர் மனைவி ராசாத்தி, மகன் சந்தீப்(5).

இவர்கள் ஆந்திர மாநிலம் அன்னமய்யா மாவட்டம் புங்கனூரில் தங்கி கூலி வேலை செய்து அங்கேயே வசித்து வந்தனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலையில் போயக்கொண்டா வனப்பகுதியில் காந்தி தனது நண்பர்கள் சிலருடன் மது அருந்துவதற்காக சென்றார். தந்தை செல்வதால் அவர்களுக்கு தெரியாமல் மகன் சந்தீப்பும் பின்தொடர்ந்து சென்றான்.

இந்நிலையில் காந்தி உள்பட அனைவரும் மது அருந்திக்கொண்டிருந்தபோது சந்தீப் வனப்பகுதியில் மறைந்திருந்து பார்த்துகொண்டிருந்துள்ளான். அப்போது திடீரென உடன் வந்த நண்பர்கள் அனைவரும் சேர்ந்து காந்தியை அடித்து கொலை செய்து தப்பி சென்றார்களாம். இதனை மறைந்திருந்த சந்தீப் பார்த்த நிலையில் அவர்கள் சென்ற பிறகு அருகில் சென்று தனது தந்தை காந்தியை எழுப்ப முயன்றான்.

ஆனால் அப்போதே காந்தி இறந்துவிட்டதாலும் இருள் சூழ்ந்த நிலையில் சந்தீப் என்ன செய்வதென்று தெரியாமல் தனது தந்தை சடலத்துடன் இரவு முழுவதும் இருந்தான். பின்னர் விடிந்ததும் நேற்று காலை காட்டிலிருந்து 2 கி.மீ தூரம் நடந்து சென்று பக்ஷிராஜபுரத்தில் உள்ள ஒரு அங்கன்வாடி ஆசிரியரிடம் நடந்ததை கூறினான். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த ஆசிரியர் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதனையடுத்து புங்கனூர் ஊரக காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சாய்பிரசாத், எஸ்.ஐ. சின்னரெட்டன்னா மற்றும் போலீசார் சிறுவன் சந்தீப் சொன்ன இடத்திற்கு சென்றனர். அங்கு காந்தி சடலத்தை பார்த்த போலீசார் பிரேத பரிசோதனைக்காக புங்கனூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதில் சிறுவன் சந்தீப் கூறிய தகவலின் அடிப்படையில் காந்தியின் நண்பர் நரசிம்மலு மற்றும் மேலும் இருவர் கொலையில் ஈடுபட்டது தெரிய வந்தது. கொலைக்கு பிறகு காந்தியின் மனைவி ராசாத்தி மற்றும் காந்தியின் நண்பர் நரசிம்மலு திடீரென மாயமாகி விட்டார்களாம்.

எனவே திருமணத்திற்கு புறம்பான உறவு காரணமாக இந்த கொலை நடந்ததா என்ற கோணத்தில் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

மேலும் சந்தேகப்படும் இருவரை கைது செய்திருப்பதாகவும் அவர்களிடம் விசாரணைக்கு பிறகு மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள் எனவும் போலீசார் தெரிவித்தனர். வாலிபரை நண்பர்களே அடித்து கொலை செய்துள்ளதும் தந்தையின் சடலத்தின் அருகே மகன் இரவு முழுவதும் தங்கியிருந்த தகவலும் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சிறுமிகளுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுக்க 5.30 லட்சம் தடுப்பூசி மருந்தை தமிழகத்துக்கு அனுப்பியது மத்திய அரசு




**சென்னை, ஏப்.08:** கர்ப்பப்பை வாய் புற்றுநோயை தடுக்க 14 வயதுடைய சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக 5.30 லட்சம் தடுப்பூசியை தமிழகத்துக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளது.

உலக அளவில் மார்பகப் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கர்ப்பப்பை வாய் புற்று நோயால்தான் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உலக அளவில் இந்த நோயால் பாதிக்கப்படும் பெண்களில் 25 சதவீதம் பேர் இந்தியர்களாக உள்ளனர்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக 80 ஆயிரம் பெண்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இலவசமாக செலுத்தப்படும் இதை கருத்தில் கொண்டு, பெண்களுக்கு வளரிளம் பருவத்திலேயே கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்தது.

அதன்படி, நாடு முழுவதும் 14 வயதுடைய சிறுமிகளுக்கு 'ஹெச்பிவி' தடுப்பூசியை இலவசமாக செலுத்தும் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த பிப்.28-ம் தேதி தொடங்கி வைத்தார்.

இந்த திட்டம் மூலம் தமிழகத்தில் 7 லட்சம் சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

அதற்காக, இதுவரை 5.30 லட்சத்துக்கும் மேற்பட்ட தடுப்பூசியை தமிழகத்துக்கு மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது. பள்ளிகள், அரசு மருத்துவமனைகளில் பொது சுகாதாரத் துறை மூலமாக சிறுமிகளுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

# கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லஞ்சம்: நதிகள் இணைப்பு சங்கம் குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.08:** நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லஞ்சம் கேட்கப்படுவதாக தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழக உணவுப் பொருள் வழங்கல், கூட்டுறவுத் துறை செயலருக்கு தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.அய்யாகண்ணு அனுப்பியுள்ள மனு: தமிழக விவசாயிகள் நெல்லுக்கு லாபகரமான விலை கிடைக்காததால் மிகுந்த சிரமத்தில் உள்ளனர்.

இந்த நிலையில், அறுவடை செய்த நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு சென்றால் அங்குள்ள அரசு அதிகாரிகள் அவற்றை வாங்க மறுக்கின்றனர்.

அதேநேரம், 40 கிலோ மூட்டைக்கு ரூ.80 லஞ்சம் கொடுத்தால் கொள்முதல் செய்கின்றனர். கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகள் கடன் கேட்டால் 2 மாத வைப்புத் தொகையாக ரூ.20 ஆயிரம் வாங்கிக் கொண்டு கடன் வழங்குவது சரியல்ல.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லஞ்சம் வாங்காமல் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும்.

40 கிலோ நெல்லை சாக்குப்பையில் அள்ளி தைத்துக் கொடுக்க அரசு ரூ.10-க்கு பதில் ரூ.20 கொடுத்தால், விவசாயிகளிடம் லஞ்சம் கேட்பது தவிர்க்கப்படும். அங்கு விவசாயிகளிடம் லஞ்சம் கேட்டால் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# ஈரான் போரால் மூலப்பொருட்கள் விலை உயர்வு: 12-ந்தேதி முதல் தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடல்




**சென்னை, ஏப்.08:** தமிழகத்தில் கோவில்பட்டி, சங்கரன்கோவில், திருவேங்கடம், சாத்தூர், சிவகாசி, குடியாத்தம், காவேரிபட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் தீப்பெட்டி உற்பத்தி நடந்து வருகிறது. தமிழகம் முழுவதும் 50 முழு எந்திர தீப்பெட்டி தொழிற்சாலைகளும், 320 பகுதி எந்திர தொழிற்சாலைகளும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீப்பெட்டி பேக்கிங் ஆலைகளும் இயங்கி வருகின்றன.

இதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 5 லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். இவற்றில் 90 சத வீதம் பெண்கள் அடங்குவார்கள். தீப்பெட்டி உற்பத்திக்கு தேவையான முக்கிய மூலப்பொருட்களான பாஸ்பரஸ், குளோரைடு. மெழுகு, அட்டை, பேப்பர் என அனைத்து பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

குறிப்பாக இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான போர் காரணமாக தீப்பெட்டி மூலப்பொருட்கள் வருவது பாதிக்கப்பட்டு உள்ளது. அதாவது மெழுகு, அட்டை, பாலித்தீன் பைகள் ஆகியவை ஈரானில் இருந்து தான் வந்து கொண்டிருந்தது. போர் காரணமாக அவை வருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவில் மூலப்பொருட்களை இருப்பு வைத்துள்ள நிறுவனங்கள் போரை காரணம் காட்டி விலையை கடுமையாக உயர்த்தி உள்ளன.

கடந்த சில மாதங்களாக ரூ.80-க்கு விற்பனையான ஒரு கிலோ மெழுகு தற்போது ரூ.150-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதுபோல் தீப்பெட்டி பண்டல்கள் பேக்கிங்க்கு தேவையான பாலித்தீன் பைகள் ரகம் வாரியாக ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.100 வரை விலை உயர்ந்து உள்ளது. பாஸ்பரஸ், குளோரைடு, பேப்பர், அட்டை என அனைத்து மூலப்பொருட்கள் விலையும் கடுமையாக உயர்ந்து இருப்பதால் தீப்பெட்டி உற்பத்தி செலவு அதிகரிக்கும் நிலை உள்ளது.

இதன் காரணமாக தொடர்ந்து தீப்பெட்டி உற்பத்தி செய்ய முடியாத நிலைக்கு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டு இருப்பதால் வருகிற 12-ந்தேதி முதல் 25-ந்தேதி வரை 2 வாரங்கள் தீப்பெட்டி ஆலைகளுக்கு விடுமுறை விட்டு மூடுவதற்கு முடிவு செய்துள்ளனர். இதனால் 5 லட்சம் தொழிலாளர்கள் வேலை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# சட்டை அணியாமல் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த விருதுநகர் சுயேச்சை வேட்பாளர் சொன்ன காரணம்!



**விருதுநகர், ஏப்.08:** விருதுநகரில் வேட்பு மனு தாக்கல் செய்ய சுயேச்சை வேட்பாளர் ஒருவர் சட்டை அணியாமல்வந்தது சலசலப்பை ஏற்படுத்தியது.

விருதுநகர் அருகேயுள்ள சத்திரரெட்டியார்பட்டியை சேர்ந்தவர் அமிர்தபாண்டி (30). இவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதற்காக விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு மனு தாக்கல் செய்ய வந்தார்.

அப்போது மேலாடை இன்றி கால் சட்டையுடன் வந்த அவரை நுழைவாயிலில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் தடுத்து நிறுத்தினார்.

"இன்றைய அடிதட்டு மற்றும் ஏழை, எளிய மக்களின் நிலை வறுமையில் இருக்கிறது. அதனை வெளிப்படுத்தும் வகையில்தான் மேலாடை இன்றி வந்ததேன்" என்று கூறி அவர் வாக்குவாதம் செய்தார்.

இருப்பினும் நன்னடத்தை விதிகளை பின்பற்றி முறைப்படிதான் மனு தாக்கல் செய்ய வேண்டும் என போலீஸார் தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட அந்த இளைஞர் அதே இடத்திலேயே சட்டை அணிந்தார். பின்னர், மனு தாக்கல் செய்ய வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார். இதனால் அப்பகுதியில் சற்று நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

# சென்னை வந்த ஜார்க்கண்ட் தொழிலாளர்களை தாக்கி வழிப்பறி: ஆட்டோ ஓட்டுநர் கூட்டாளியுடன் கைது





**சென்னை, ஏப்.08:** சென்னை வந்த ஜார்க்கண்ட் தொழிலாளர்களை தாக்கி வழிப்பறியில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுநர், கூட்டாளியுடன் கைது செய்யப்பட்டார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த கரண், மோண்டி, புனா பாடி ஆகிய 3 பேரும் சென்னை சூளை பகுதியில் உள்ள கடை ஒன்றில் பணி செய்ய கடந்த 3-ம் தேதி ரயில் மூலம் சென்னை எழும்பூர் வந்தடைந்தனர். பின்னர், அங்கிருந்து, ஆட்டோவில் சூளை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

பணம், செல்போன் பறிப்பு

மோண்டி வழியில் இறங்கி விட மற்ற இருவரும் ஆட்டோவில் சென்று கொண்டிருந்தனர். அப்போது, ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த நபருடன் சேர்ந்து ஆட்டோவில் இருந்த கரண் மற்றும் புனாபாடி ஆகியோரை கத்தியைக் காட்டி மிரட்டி, அவர்கள் வைத்திருந்த செல்போன்கள் மற்றும் பணத்தை பறித்தனர். பின்னர், அவர்களை ரித்தர்டன் சாலை அருகே இறக்கி விட்டு தப்பினர்.

அம்பத்தூர், அயப்பாக்கம்

இதுகுறித்து, எழும்பூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், ஜார்க்கண்ட் மாநில இளைஞர்களை தாக்கி வழிப்பறியில் ஈடுபட்டது அம்பத்தூர், அயப்பாக்கத்தைச் சேர்ந்த நாகராஜ் (28) மற்றும் அவரது கூட்டாளி என்பது தெரிய வந்தது.

இதையடுத்து, தலைமறைவாக இருந்த நாகராஜை போலீஸார் கைது செய்தனர். அவர் கொடுத்த தகவலின் பேரில் கூட்டாளியான காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரைச் சேர்ந்த மணிமாறன் (37) என்பவரையும் போலீஸார் கைது செய்தனர்

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஏப்.12 வரை மிதமான மழை வாய்ப்பு

**சென்னை, ஏப்.08:** தமிழகத்தில் நாளை முதல் ஏப்.12-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெலங்கானா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை ராயலசீமா, தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (ஏப்.7) ஓரிரு இடங்களிலும், நாளை ஒருசில இடங்களிலும், 9, 10 தேதிகளில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 11, 12 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில்



அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். 8- முதல் 10-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக அரியலூர் மாவட்டம் ஜெயம்கொண்டம், திருச்சி மாவட்டம் புள்ளம்பாடியில் தலா 8 செமீ, அரியலூர் மாவட்டம் சுத்தமல்லி அணை, திருச்சி மாவட்டம் நந்தியாறு, புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் தலா 7 செமீ, தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, திருச்சி மாவட்டம் கல்லக்குடி, ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

## கோவை தெற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு மானாமதுரை நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி வாழ்த்து



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியின் முதல் நகர் மன்ற தலைவர் தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் மேற்கு மண்டல திமுக பொறுப்பாளர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களை சந்தித்து அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தார்.

## எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்து இளம்பெண் தற்கொலை: காப்பாற்ற முயன்றவரும் உயிரிழந்த பரிதாபம்

**செங்கல்பட்டு, ஏப்.08:** செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் ரெயில் நிலையம் வழியாக நேற்று காலை சுமார் 10.20 மணியளவில், எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்று அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. அப்போது, ரெயில் நிலையத்தின் அருகே நின்று கொண்டிருந்த 30 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவர் திடீரென எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்தார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த ஆண் பயணி ஒருவர், அந்த பெண்ணை காப்பாற்ற முயன்றார். துரதிர்ஷ்டவசமாக, தற்கொலைக்கு முயன்ற பெண், காப்பாற்ற முயன்றவர் என இருவர் மீதும் ரெயில் மோதியது. இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தாம்பரம் ரெயில்வே போலீசார், இருவரது உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முதற்கட்ட விசாரணையில், பெண்ணைக் காப்பாற்ற முயன்று உயிரிழந்தவர் மறைமலைநகர் அருகே உள்ள தாலிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன் (53 வயது) என்பது தெரிய வந்துள்ளது.

தற்கொலைசெய்துகொண்ட பெண் யார்? அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? தற்கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து இதுவரை தெரியவில்லை. இது தொடர்பாக தாம்பரம் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மறைமலைநகர் ரெயில் நிலையம் அருகே பரபரப்பான காலை நேரத்தில் நடந்த இந்த சம்பவம் பயணிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## ஏறிய வேகத்தில் மீண்டும் இறங்கிய தங்கம் விலை - இன்றைய நிலவரம்



**சென்னை, ஏப்.08:** கடந்த வாரம் ஆபரணத்தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கம் காணப்பட்ட நிலையில் வார இறுதி நாளில் உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.13,950-க்கும் சவரனுக்கு 800 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 11ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனையானது.

நேற்று காலையில் அதிரடியாக குறைந்த தங்கம் விலை மீண்டும் மாலையில் உயர்ந்தது. நேற்று காலையில் கிராமுக்கு 140 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.13,810-க்கும், சவரனுக்கு ரூ.1,120 குறைந்து ரூ.1,10,480-க்கும் விற்பனையானது. இதையடுத்து தங்கம் விலை மாலையில் மீண்டும் உயர்ந்தது. கிராமுக்கு ரூ.180 அதிகரித்து ரூ.13,990 ரூபாய்க்கும், சவரனுக்கு ரூ.1,440 உயர்ந்து ரூ. 1,11,920-க்கும் விற்பனையானது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 குறைந்து ரூ.1,10,880-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.130 குறைந்து ரூ.13,860-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.260-க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடைசி ஐந்து நாள் தங்கம் விலை நிலவரம்:-
06-04-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,11,920
05-04-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,11,600
04-04-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,11,600
03-04-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,10,800
02-04-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,10,000
கடைசி ஐந்து நாள் வெள்ளி விலை நிலவரம்:-
06-04-2026- ஒரு கிராம் ரூ.260
05-04-2026- ஒரு கிராம் ரூ.255
04-04-2026- ஒரு கிராம் ரூ.255
03-04-2026- ஒரு கிராம் ரூ.255
02-04-2026- ஒரு கிராம் ரூ.255

## மானாமதுரை அருகே கேட்ட வரம் தரும் முத்துமாரியம்மன் கோவில் முளைப்பாரி விழா







**மானாமதுரை, ஏப்.08:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மிளகனூர் ஊராட்சி அன்னவாசல் ரோட்டில் உள்ள எஸ்.கரிசல்குளம் கிராமத்தில் பிரசித்தி பெற்றகேட்டவரம்தரும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக் கோவில் வளாகத்தில் கோவில் நிறுவனர் ஶ்ரீ லெட்சுமண சுவாமி ஜீவசமாதி உள்ளது.இங்கு ஆண்டு பங்குனி தோறும் திருவிழா நடைபெறும்.

கடந்த 29ந்தேதி பங்குனி 15ஞாயிறு அன்று மாலை காப்புகட்டுதலுடன் திருவிழா தொடங்கியது.பங்குனி திருவிழா தொடங்குவதை முன்னிட்டு கேட்ட வரம் முத்துமாரியம்மன் கோவிலில் சிறப்பு கோபூஜை மற்றும் சிறப்பு கணபதி ஹோமம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து திருவிழா நடைபெறும் நாட்களில் திருவிளக்கு பூஜை, மாவிளக்கு வழிபாடு, பூச்சொரிதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. முக்கிய விழாவாக பக்தர்கள் அக்னி சட்டி விழா மற்றும் பக்தர்கள் முளைப்பாரி எடுத்து ஊர்வலமாக வந்து கோவிலில் வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் அக்கினி சட்டி, அழகு குத்தி சாமியாடி வந்து நேர்த்தி கடன் செலுத்தினார்கள் .இரவு சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

இரவு முழுவதும் பக்தர்கள் வழிபாடு செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் கேட்டவரம்தரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் டிரஸ்டி ராக்கு லெட்சுமணன், செர்டு பாண்டி மற்றும் விழாக்குழுவினர் செய்து இருந்தனர்.

## தூத்துக்குடி: தனியார் பேருந்து விபத்தில் டிரைவர் பலி; 9 பயணிகள் படுகாயம்



**தூத்துக்குடி, ஏப்.08:** தூத்துக்குடி மாவட்டம், ஏரலில் இருந்து தூத்துக்குடி வழியாக பசுவந்தனைக்கு இன்று காலை ஒரு தனியார் பேருந்து சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தை செய்துங்கநல்லூர் அருகே உள்ள வில்லாகுளம் கிராமத்தைச் சேர்ந்த பிச்சையா என்பவரது மகன் மணிமுத்து (வயது 55) ஓட்டி வந்தார். நடத்துனராக ஓட்டப்பிடாரம் அருகே உள்ள ஆவரைகுளம் கிராமத்தை சேர்ந்த சுரேஷ் பணியாற்றி வந்தார்.

சுமார் 60-க்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்த அந்தப் பேருந்து, இன்று காலையில் தூத்துக்குடி-திருநெல்வேலி பிரதான சாலையில் உள்ள மறவன்மடம் அருகே வந்தபோது எதிர்பாராதவிதமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. கட்டுப்பாடின்றி சென்ற பேருந்து, சாலையோரம் இருந்த மின்கம்பத்தில் மோதியதோடு, அங்கிருந்த ஒரு பனைமரத்தின் மீதும் மோதியது.

அதன் பின்னரும் நிற்காமல் சுமார் 100 அடி தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு, ஒரு கட்டிடத்தின் மீது மோதி நின்றது. இந்தக் கோர விபத்தில், பேருந்து டிரைவர் மணிமுத்து இடிபாடுகளுக்குள் சிக்கி அதே இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் பேருந்தில் பயணம் செய்த பயணிகளில் 9 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த புதுக்கோட்டை காவல் நிலைய போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து, விபத்திற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது. இந்த விபத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் கைதானவருக்கு; மூதாட்டி கொலை வழக்கு ஜாமீன் ரத்து: மதுரை ஐகோட்டு கிளை உத்தரவு



**தூத்துக்குடி, ஏப்.08:** ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த தர்மமுனீஸ்வரன், கோவில்பட்டியில் மூதாட்டி ஒருவரைபாலியல்வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை பெற்றவர். இந்த தண்டனையை நிறுத்தி வைத்து தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி அவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்திருந்தார். அவரது மனுவை விசாரித்த நீதிமன்றம், சில நிபந்தனைகளுடன் தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் வழங்கியது. குறிப்பாக தூத்துக்குடி நீதிமன்றத்தில் தினமும் நேர்நின்று கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

ஜாமீனில் வெளிவந்த தர்மமுனீஸ்வரன், தூத்துக்குடி நீதிமன்றத்தில் கையெழுத்திட சென்ற காலகட்டத்தில், விளாத்திகுளம் அருகே பிளஸ்-2 மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்த வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். ஜாமீன் காலத்தின்போது அடுத்தடுத்த குற்றங்களில் ஈடுபட்டதை சுட்டிக்காட்டி, மூதாட்டி கொலை வழக்கில் அவருக்கு வழங்கப்பட்ட ஜாமீனை ரத்து செய்யக்கோரி தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ் மற்றும் கே.கே.ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு; "குற்றவாளிக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தரவு மற்றும் ஜாமீன் ஆகியவற்றை ரத்து செய்து" உத்தரவிட்டனர்.

இதே கோரிக்கையை முன்வைத்து மாணவியின் பெற்றோர் தாக்கல் செய்த மனுவை, அரசு மனு மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு முடித்து வைத்தனர்.

இதன் மூலம், ஜாமீனில் வெளியே இருந்த தர்மமுனீஸ்வரன் மீண்டும் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.




## தமிழக தேர்தல் 2026: ஸ்டாலின், விஜய், நயினார், சீமான் மனுக்கள் ஏற்பு



**சென்னை, ஏப்.08:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று (ஏப்.07) தொடங்கியிருக்கும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஸ்டாலின், பெரம்பூர் தொகுதியில் விஜய் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 30-ம் தேதி தொடங்கியது. முதல் நாளில் முதல்வர் ஸ்டாலின், தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

அதன்பின்னர், 4 பொது விடுமுறை நாட்களில் மனு தாக்கல் நடைபெறவில்லை. இந்நிலையில், வேட்புமனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாள் என்பதால், அனைத்து தொகுதிகளிலும் காலை முதலே மனு தாக்கல் களைகட்டியது. எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, விருத்தாசலத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று தொடங்கியிருக்கும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் வேட்பு மனு ஏற்கப்பட்டது. இத்தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்காவது முறையாக போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தவிர, பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய்யின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

அதேபோல், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் துணை முதல்வர் உதயநிதி, சாத்தூரில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தருமபுரியில் சவுமியா அன்புமணி, தூத்துக்குடியில் சீமான் ஆகியோரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனாவின் வேட்புமனு நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மனைவியின் சொத்துவிவரம் குறித்த சந்தேகங்களால் நிறுத்திவைக்கப்பட்டதாக தகவல். தியாகராய நகரில், தவெக வேட்பாளர் என்.ஆனந்த் வேட்புமனு ஏற்கப்பட்டது.

## மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரி ஐகோர்ட்டில் ராமதாஸ் அவசர முறையீடு



**சென்னை, ஏப்.08:** மாம்பழம் சின்னத்தை முடக்கக்கோரும் பாமக நிறுவனர் ராமதாசின் மனுவை 3 நாட்களுக்குள் விசாரித்து தீர்ப்பு அளிக்க வேண்டும் என சென்னை சிட்டி சிவில் கோர்ட்டுக்கு சுப்ரீம் கோர்ட்டு கடந்த மாதம் 23-ந்தேதி உத்தரவிட்டது. அதன்படி, ராமதாஸ் தாக்கல் செய்த மனுவை விசாரித்த சென்னை சிவில் கோர்ட்டு அந்த மனுவை தள்ளுபடி செய்து, தேர்தல் ஆணையத்தை அணுக ராமதாசுக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜோய்மால்ய பாக்ஷி ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது ராமதாஸ் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் விகாஸ் சிங், 'யாருக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கப்படும் என்பது இதுவரை தெளிவாகவில்லை. மாம்பழம் பொது சின்னமாக இருந்தால் குலுக்கல் முறையிலோ அல்லது முதலில் வருபவருக்கோ முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படும்.

மாம்பழம் பொது சின்னம் இல்லை என்ற நிலைப்பாட்டை தேர்தல் ஆணையம் எடுக்க வேண்டும். பொது சின்னம் இல்லையென்றால் யாருக்கும் ஒதுக்க முடியாது. தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்குவதற்கு முன்னதாக இந்த விவகாரத்தில் தீர்வு காண தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று வாதிட்டார்.

'அன்புமணி ராமதாஸ் தலைமையிலான கட்சியே உண்மையான பாமக' என அன்புமணி தரப்பில் வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மாம்பழம் சின்னத்தை முடக்கக்கோரி சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்ய ராமதாசுக்கு உத்தரவிட்டனர்.

தேர்தல் நெருங்குவதை கருத்தில் கொண்டு ஐகோர்ட்டும் விரைந்து இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தனர். இந்த நிலையில் மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோருவதை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில் ராமதாஸ் தரப்பில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி வழக்கு தாக்கல் செய்ய உள்ளதால் அவசர வழக்காக விசாரிக்க ராமதாஸ் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்துள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM